# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 414

சனி, 24 ஒக்ரோபர், 2026 | பக்கங்கள் 15

www.ilakku.org










# செம்மணி குறித்த இடைக்கால அறிக்கைக்கு விளக்கம் கோரி நகர்த்தல் பத்திரம் தாக்கல்



செம்மணிப் புதைகுழி தொடர்பான அறிக்கையில் 'பெரும் புதைகுழி' என்ற சொல்லை பேராசிரியர் ராஜ் சோமதேவ திட்டமிட்டு நீக்கியுள்ளார் எனச் சந்தேகிப்பதாக பாதிக்கப்பட்ட தரப்பினரின் சார்பில் சட்டத்தரணிகள் குழாமொன்று நகர்த்தல் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளனர். செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகளின் போது, 'பாதிக்கப்பட்ட தரப்பினர்' என்ற வகையினரின் சார்பில் சட்டத்தரணிகள் சிலர் நீதிமன்றில் தொடர்ச்சியாக முன்னிலையாகி வந்தனர்.

அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நகர்த்தல் பத்திரத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. பேராசிரியர் ராஜ் சோமதேவ நீதிமன்றத்தில் சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையில் 'பெரும் புதைகுழி' என்ற சொல்லை வேண்டுமென்றே நீக்கியுள்ளார். இதற்கு முன்னர் அவரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகளில் அந்தச் சொற்றொடர் உள்ளடங்கியிருந்த நிலையில், தற்போதைய அறிக்கையில் அந்தச் சொல் விடுபட்டுள்ளமையானது திட்டமிட்ட நடவடிக்கை என்றே கருத வேண்டியுள்ளது. இது தீவிரமான சந்தேகங்களையும் எழுப்புகின்றது.

குறித்த அகழ்வுப் பகுதியை வழக்கமான அடக்க இடமாகக் கருதுவதற்கான அடிப்படை ஏதேனும் இருந்தால், அதனை அறிக்கை தெளிவுபடுத்த

தொடர்ச்சி: பக்கம் 13

## தொடரும் மயிலிட்டி மக்களின் காணி விடுவிப்புப் போராட்டம்!



மயிலிட்டி மக்களின் பூர்வீகக் காணிகளை விடுவிக்குமாறு கோரி முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் போராட்டம், கொட்டும் மழைக்கு மத்தியிலும் 27ஆவது வாரமாக நேற்று (23) நடத்தப்பட்டது.

தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாத துயரத்தையும், நீண்ட காலமாக அனுபவித்து வரும் அவலங்களையும் சுமந்துகொண்டு, தமது உரிமைக்காக மயிலிட்டி மக்கள் தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்றனர்.

இந்நிலையில் மழை, வெயில் என இயற்கையின் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் போராட்டத்தை கைவிடாது தொடர்ந்து வரும் மக்கள், பெய்து வரும் கன மழைக்கு மத்தியிலும், தமது காணிகள் விடுவிக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் இன்றும் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தொடர்ச்சி: பக்கம் 13

## செம்மணி விவகாரம்: அரசாங்கத்தின் மீது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



செம்மணி மனிதப் புதைகுழி விசாரணை தொடர்பில் அரசாங்கம் வெளியிட்டுள்ள 4 ஆவது இடைக்கால அறிக்கை முற்றிலும் திசை திருப்பப் பட்டதாகவும், உண்மைகளை மூடி மறைக் கும் சதிச் செயல் எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் நேற்றைய தினம் (23) கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

செம்மணி விவகாரம் தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் கூறப்பட்ட ஆய்வுகளை, 4 ஆவது இடைக்கால அறிக்கை தலைகீழாக மாற்றி எழுதியுள்ள தாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி: பக்கம் 13

# மத்திய கிழக்கிலுள்ள தளங்களிலிருந்து அமெரிக்கா வெளியேறுகிறது!




மத்திய கிழக்கு முழுவதும் உள்ள தளங்களில் இருந்து அமெரிக்க இராணுவம் அமைதியாக துருப்புக்களைத் திரும்பப் பெறத் தொடங்கியுள்ளது, அதே நேரத்தில் வொஷிங்டன் அப்பகுதியில் உள்ள பல தூதரகங்களில் இருந்து தூதரகப் பணியாளர்களை வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளது என்று என்பிசி நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரான் மீது ஒரு புதிய அலைத் தாக்குதல்களைத் தொடங்குவது குறித்து அதிபர் டொனால்ட்  ட்ரம்ப் பரிசீலித்து வரும் வேளையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், இந்தத் திரும்பப் பெறுதல்கள்,  பெப்ரவரியில் நடந்த ஆரம்பகட்ட அமெரிக்க-இஸ்ரேலியத் தாக்குதல்களுக்கு முன்னதாக பென்டகன் மற்றும் வெளியுறவுத் துறையால் செய்யப்பட்ட தயாரிப்புகளை ஒத்திருப்பதாக, இரண்டு அமெரிக்க அதிகாரிகள் மற்றும் இவ்விஷயம் குறித்து அறிந்த இருவரை மேற்கோள் காட்டி என்பிசி புதன்கிழமை(21) செய்தி வெளியிட்டது.

ஜோர்டான், கத்தார் மற்றும் குவைத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கத் துருப்புக்களும் இடமாற்றம் செய்யப்படுபவர்களில் அடங்குவர் என்று அந்த அறிக்கை கூறுகிறது. வான் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக்குப் பொறுப்பான பணியாளர்கள் உட்பட, தனது பிராந்தியத் தளங்களில் வரையறுக்கப்பட்ட அளவிலான இருப்பைப் பராமரிக்க வொஷிங்டன் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. பெப்ரவரி 28 தாக்குதலுக்கு முன்னதாக, எதிர்பார்க்கப்பட்ட ஈரானியப் பதிலடியிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக, பென்டகன் பாதிக்கப்படக்கூடிய தளங்களில் இருந்து பெருமளவிலான துருப்புக்களைத் திரும்பப் பெற்றது. ஆயிரக்கணக்கான அமெரிக்கப் படை வீரர்கள் பொதுமக்கள் தங்கும் விடுதிகள் மற்றும் அலுவலகக் கட்டிடங்களில் தஞ்சம் புகுந்ததைத் தொடர்ந்து, வளைகுடாப்

தொடர்ச்சி: பக்கம் 13

## தனியுரிமைச் சர்ச்சையில் மெட்டா நிறுவனத்திற்கு 25 பில்லியன் டொலர் அபராதம்!



அரசியல் பிரசாரங்களுக்காக மில்லியன் கணக்கான அமெரிக்கர்களிடமிருந்து தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டதை அம்பலப்படுத்திய கேம்பிரிட்ஜ் அனலிடிகா ஊழலைத் தொடர்ந்து, ஃபேஸ்புக் பயனர்களின் தனிப்பட்ட தரவுகளின் தனியுரிமை குறித்து அவர்களை ஏமாற்றியதற்காக, மெட்டா நிறுவனம் 25 பில்லியன் டொலர் சிவில் அபராதம் செலுத்த வேண்டும் என்று ஒரு அமெரிக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

செப்டம்பரில் வழங்கப்பட்ட ஒரு ஜூரி தீர்ப்பைத் தொடர்ந்து, நியூ மெக்சிகோ மாவட்ட நீதிபதி பிரான்சிஸ் மேத்யூ புதன்கிழமை(21) இந்தத் தீர்ப்பை வழங்கினார். அந்தத் தீர்ப்பில், மாநிலத்தின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களை ஏறக்குறைய 44 மில்லியன் முறை மீறியதற்கு ஃபேஸ்புக்கின் தாய் நிறுவனமே பொறுப்பு என்று கண்டறியப்பட்டது.

மாநிலச் சட்டத்தின் கீழ் மெட்டாவின் முறைகேடுகளுக்கு 219 பில்லியன்  டொலருக்கும் அதிகமான அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்று நீதிபதி முடிவு செய்தார், ஆனால் அந்தத் தொகையை 25 பில்லியன் டொலராகக் குறைத்தார். இது ஒரு அமெரிக்க நிறுவனத்தின் மீது இதுவரை விதிக்கப்பட்ட மிகப்பெரிய நிதி அபராதங்களில் ஒன்றாக அமைகிறது.

"பல ஆண்டுகளாகத் திட்டமிட்டுப் பொதுமக்களுக்கு ஒளிபரப்பப்பட்ட ஃபேஸ்புக்கின் முறைகேடுகள், அதன் முக்கிய வணிக நடைமுறைகளின் மையத்தையே பாதிக்கின்றன," என்று மேத்யூ தனது உத்தரவில் எழுதியுள்ளார். 2018 ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் அனலிடிகா ஊழலில் இருந்து இந்த வழக்கு உருவானது. அப்போது, பிரிட்டிஷ் அரசியல் ஆலோசனை நிறுவனமான கேம்பிரிட்ஜ் அனலிடிகா, சுமார் 87

தொடர்ச்சி: பக்கம் 13

## உலகளாவிய கடன் 365 ட்ரில்லியன் டொலருக்கும் மேலாக உயர்வு!



சர்வதேச நிதி நிறுவனத்தின் (IIF) தரவுகளின்படி,அரசாங்கங்கள்,குடும்பங்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளிட்டவற்றின் ஒட்டுமொத்த உலகளாவிய கடன், 2026-ஆம் ஆண்டின் முதல் பாதியில் 10 டிரில்லியன் டொலர் அதிகரித்து, 365 டிரில்லியன் டொலருக்கும் மேலாக உயர்ந்துள்ளது. இது பூமியில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் சுமார் 44,000 டொலர் கடனுக்குச் சமமாகும். இந்த அதிகரிப்பில் பெரும்பகுதி வளர்ந்து வரும் சந்தைகளிலிருந்தே வந்துள்ளது.

இந்தக் கடனுக்கான வட்டிச் சுமை மிகவும் அதிகமானது. வளர்ந்த பொருளாதார நாடுகள் கடந்த ஓராண்டில் மட்டும் தங்கள் அரசுப் பத்திரங்களுக்கான வட்டியாக 3.3 டிரில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையைச் செலுத்தியுள்ளன. இது, உலகம் முழுவதும் பாதுகாப்புத் துறை (3.1 டிரில்லியன்  டொலர்), செயற்கை நுண்ணறிவு (2.6

தொடர்ச்சி: பக்கம் 13

## மத்திய கிழக்கின் பொருளாதார உற்பத்தியில் கடும் சரிவு சர்வதேச நாணய நிதியம் (IMF)



ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஈடுபட்டுள்ள போரின் காரணமாக, மத்திய கிழக்கு, வட ஆப்பிரிக்கா மற்றும் பாகிஸ்தான் ஆகிய பிராந்தியங்களின் பொருளாதார உற்பத்தி யில் இந்த ஆண்டு கடும் சரிவு ஏற்படும் என்றும், அதனைத் தொடர்ந்து 2027-ஆம் ஆண்டில் 6.6 சதவீத வளர்ச்சி மீண்டும் எட்டப்படும் என்றும் சர்வதேச நாணய நிதியம் (IMF) கணித்துள்ளது.

போரின் தாக்கத்தால் எரிசக்தி உற்பத்தி, கப்பல் போக்குவரத்து, சுற்றுலா, வர்த்தகம் மற்றும் பொருளாதார நம்பிக்கை ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளதால், இப்பிராந்தியத்தின் பொருளாதார உற்பத்தி 1.3 சதவீதம் சுருங்கும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

2027-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மோதல்கள் தணிந்து, வர்த்தகம் படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் இந்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள IMF, அதே சமயம் தற்போதைய சூழல் "மிகவும் அதிக நிச்சயமற்ற தன்மையுடன்" காணப்படுவதாகவும் எச்சரித்துள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 13

## மேய்ச்சல் நிலப் பிரச்சினை: பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தீர்மானம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு - மாதவனை பகுதியில் கால்நடை பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைக்கு நிரந்தரமான சட்டத் தீர்வொன்றை எட்டுவதற்கான கலந்துரையாடலொன்றை நடத்த விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் காணி சீர்திருத்தங்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் கால்நடை பண்ணையாளர்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து குறித்த கலந்துரையாடலை நடத்த அமைச்சர் கே.டி.லால் காந்த இணக்கம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) கருத்து வெளியிட்ட அவர், மயிலத்தமடு - மாதவனை காணி விவகாரத்தைத் தமிழ், சிங்கள மக்களுக்கிடையிலான இன முரண்பாடாக அணுகாமல், பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கும் கால்நடை வளர்ப்பாளர்களுக் கும் இடையிலான வாழ்வாதாரப் பிரச்சினையாகவே அரசாங்கம் நோக்குகிறது என்று தெரிவித்தார்.

இரு தரப்பினரதும் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து, எவ ருக்கும் அநீதி இழைக்கப்படாத வகையில் தீர்வொன்றை எட்ட வேண்டியது அவசியம்.

மயிலத்தமடு, மாதவனை உள்ளிட்ட பகுதிகள் நீண்ட காலமாகக் கால்நடைகளை மேய்ச்சலுக்கு உட்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், அவை சட்டப்பூர்வமான மேய்ச் சல் நிலங்களாக வர்த்தமானி அறிவிப்பின் மூலம் பிரகடனப் படுத்தப்படவில்லை என மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் மற்றும் மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும்,குறித்த பகுதிகளின் சில நிலங்கள் வனப் பாதுகாப்பு மற்றும் மகாவலி விசேட பகுதி தொடர்பான சட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டிருப்பதால், கால்நடை வளர்ப்பாளர்களுக்குக் காணிகளை ஒதுக்குவதில் சட்டச் சிக்கல்கள் காணப்படுகிறது.

இதன் காரணமாக, கால்நடை பண்ணையாளர்களுக்கான மேய்ச்சல் நிலங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், ஏற்கனவே பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் செயற் பாடு களைப் பாதுகாப்பதற்கும் சட்டரீதியான தீர்வு அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் இடையில் மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரி கள் கள ஆய்வுகளை மேற்கொண்டு 34 மரங்களை அடை யாளப்படுத்தி தற்காலிக எல் லைகளை வகுத்துள்ளனர்.

அத்துடன், கால்நடைகள் தங்கியிருக்கும் 32 முக்கிய இடங்கள் அடையாளம் காணப்பட்டுக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி: பக்கம் 13

## அரச செலவினங்களைக் குறைக்க 34 அரச நிறுவனங்களை மூடத் தீர்மானம்: ஜனாதிபதி



அரச செலவினங்களைக் குறைத்து, அரசாங்கத்தின் நிதிச்சுமையைக் குறைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, 34 அரச நிறுவனங்களை மூடுவதற்கான முடிவுகளை நிதி அமைச்சு இறுதி செய்துள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் நடைபெற்ற அரசாங்க நில அள வையாளர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரை யாற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுச் சேவையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, பொதுச் சேவைகளை வழங்குவதற்கான செலவுகள் மிக அதிகரித்துள்ளதால், அரச நிறுவனங்களின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும், தேவையற்ற செலவினங்களைக் குறைப்பதற்கும் சில நிறுவனங்களை மூடு வதுடன், மேலும் சில நிறுவனங்களை ஒன்றிணைக்கவும் அரசாங் கம் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த மூடல் மற்றும் மறுசீரமைப்புச் செயற்பாடுகளைக் கண்காணித்து நடைமுறைப்படுத்துவதற்காக விசேட குழு வொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த மாற்றங்களின் அவசியத்தை விளக்கிய அவர், பல அரச நிறுவனங்கள் நிறுவப்பட்ட காலத்திலிருந்து தற்போதைய சூழ்நிலைகள் பெருமளவில் மாறியுள்ளதாகத் தெரிவித்தார். முன்னர் அரசாங்கம் மாத்திரமே சேவைகளை வழங்கிய பல துறைகளில் தற்போது வலுவான தனியார் துறையொன்றும் உருவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சில சேவைகளை அரசாங்கம் நேரடியாகத் தொடர்ந்து வழங்க வேண்டுமா அல்லது தனியார் துறையினரின் பங்களிப்புடன்

தொடர்ச்சி: பக்கம் 13

## ஆசிரியர் தலையங்கம் | 24 ஒக்ரோபர், 2026

### வல்லாண்மைகளின் மூவொரு ஒருங்கிணைப்பு சிறுதேச இன இறைமைக்கு பேராபத்து

கடந்த வாரத்தில் அமெரிக்க அரசதலைவரின் முயற்சியான அமெரிக்க ரஸ்ய சீன அரச தலைவர்களின் பீக்கிங் நேரடிச் சந்திப்பு முயற்சிக்கு ரஷ்ய அரசுத்தலைவர் புடின் பச்சைக்கொடி காட்டியுள்ளார். இதனை மேற்குலகக் கிறிஸ்தவ நாகரிக ஆன்மீக மொழியில் கூறுவதானால் அமெரிக்கா தன்னை மூவொரு கடவுளாக மாற்ற முயலும் செயல் எனலாம் என்பது இலக்கின் இவ்வாரக் கருத்து.

அமெரிக்கா இந்த பீக்கிங் பேச்சுவார்த்தை முயற்சி மூலம் தன்னை உலகின் முதன்மை வல்லாண்மைகளிடை ஒருங்கமைவு கூட்டாண்மை பங்காண்மைகளை கட்டமைத்து தன்னை அனைத்துக்கும் மூலமான தந்தைக் கடவுளாகவும், ரஸ்யாவை தந்தைக் கடவுளின் சித்தத்தை உலகில் நிறைவேற்றும் கடவுளின் 2வது நிலையான இயேசு கிறிஸ்துவாகவும், சீனாவை பிதாவான அமெரிக்கா மகனான ரஸ்யா இடையான அன்பு செய்தலின் செயற்பாடாக இரு நாடுகளது இறையாண்மைகளையும் எங்கும் எதிலும் செயற்படுத்தும் தூய ஆவியாகவும், ஆயினும் ஆள்நிலையில் சமவல்லமையுள்ள மூவராகவும் செயல்நிலையில் பிதாவான அமெரிக்காவின் விருப்புக்குள் அடங்கும் ஒருவராகவும் கிறிஸ்தவ ஆன்மீகத்தின் மூவொரு கடவுள் கோட்பாட்டை இன்றைய சமகால அரசியலின் மூவொரு வல்லாண்மை கோட்பாடாக உலக அரசியலைப் பொருளாதாரத்தை நெறிப்படுத்தும் புதிய உலக அரசியல் ஒழுங்குமுறையாக மாற்ற முனைகிறார் என்பதனை இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது.

மேலும் ரஷ்யாவின் அரசத்தலைவர் புடினை அமெரிக்கா அவரே (Man of humanitarian) என்று புகழாரம் சூட்டுகையில் உக்ரேன் போரில் ரஷ்யா செய்த அனைத்து மனித உரிமைகள் சிறுவர் உரிமைகள் மீறல்களையும் ட்ரம்ப் என்னும் பிதாக்கடவுள் மன்னித்து விட்டது என்பதனை உலகு புரிந்து கொள்கிறது.

அமெரிக்கா தனது புதிய உலக அரசியல் பொருளாதார செயற்கை நுண்ணறிவு மேலாண்மைக்காக வீசும் இந்த இராஜதந்திர வலையை வேடன் எறிந்த வலையையே தமது கூட்டுப்பலத்தால் தூக்கிக் கொண்டு பறந்த பறவைகள் கதையாகச் சீனாவும் ரஸ்யாவும் மாற்றிவிடுவார்கள் என்னும் எச்சரிக்கையை மேற்குலக அமெரிக்க ஐரோப்பிய அவுஸ்திரேலிய கண்ட நாடுகள் விடுத்துள்ளன.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் பிரித்தானியாவின் ஆங்கில நாளிதழ் ‘த கார்டியன்’ உடைய வெளிவிவகாரக் கட்டுரையாளர் சைமன் டிஸ்டால் (Simon Tisdall) “ ட்ரம்ப் உக்ரேனை ரஸ்யாவிடம் விற்றுவிட்டார். ஐரோப்பிய தலைவர்கள் வாஷிங்டனிலிருந்து வரும் எந்தவொரு வார்த்தையையும் கூட இனி நம்பக்கூடாது. ட்ரம்பைத் தண்டிக்க நாங்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்” என 22.10. 2026 இல் கருத்துரைத்துள்ளார்.

ஐரோப்பிய பாராளுமன்றம் தனது சுதந்திரமான எண்ணம் சுதந்திரமான கருத்துரைப்புக்கான செயற் பாட்டாளர்களுக்கு வழங்கும் அதியுயர் மனித உரிமைப் பரிசான சகரோவ் (Sakharov) பரிசை ட்ரம்பினால் நிதி வழங்கல் மறுக்கப்பட்டும் செயற்பாடுகள் முடக்கப்பட்டும் கிடக்கும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு வழங்கியுள்ளமை ட்ரம்பிசத்திலிருந்து ஐரோப்பா தனியான பாதையில் செல்லத் தொடங்கி விட்டதை மீளுறுதி செய்துள்ளது.

அத்துடன் “இயற்கையான வர்த்தக மனிதர்” என ட்ரம்ப் பிரித்தானியாவின் இன்றைய பிரதமர் அன்டி பேர்ணம் அவர்களையும் ட்ரம்ப் அவருடனான முதலாவது வெள்ளை மாளிகைச் சந்திப்பில் கருத்துரைத்தமையும் உலகத் தலைவர்களை தனது வர்த்தக நோக்கான அணுகுமுறை அரசியல் வலைக்குள் இழுத்துக்கொள்ளும் முயற்சியாகவே அமைந்தது என்றே ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியமையையும் இலக்கு மீள்நினைவூட்ட விரும்புகிறது.

ஆயினும் பிரான்சின் அணுவாயுத பலத்தை ஜேர்மனியின் உற்பத்திப் பலத்தைக் குறைத்தது போல் அமெரிக்காவால் இலகுவில் குறைக்க இயலாது என்பதால் பிரான்ஸ் சார்ந்த உலக அரசியல் தலைமைத்துவம் கட்டமைக்கவிடாது தடுப்பதற்கான ஆயுதமாக அதிதீவிர வலதுசாரிகள் எழுச்சியையும் எண்ணெய் விலையுயர்வு பொருளாதாரச் சிக்கல்களையும் காலநிலைச் சீர்கேடு சமூகப் பொருளாதார பிரச்சினைகளையும் தூண்டி விடுகையில் உள்ளூர் அரசியல்வாதிகள் மக்ரோனுக்கு எதிர்வினையாக இவற்றை ஜென்சி அல்பா தலைமுறை இளையவர்களின் பிரச்சினைகளுடன் இணைத்துத் தன் கண்ணைத் தன் கையைக் கொண்டு குத்தும் செயலாக பிரான்ஸ் எங்கும் ஜென்சி அல்பா தலைமுறை தெருவில் இறங்கி ஊரை எரிக்கும் செயற்பாடுகளை பிரான்சிய எதிர்க்கட்சித் தலைமைகளே தோற்றுவித்துள்ளன. இந்த ஜென்சி அல்பா இளையவர் தெருவில் இறங்கும் தொற்று பெல்ஜியம் இத்தாலி போர்த்துக்கல், ஸ்பெயின், அல்பேனியா போன்ற நாடுகளிலும் ஏற்பட்டுள்ளதையும் உலகு காண்கிறது.

அதே வேளை கொலம்பியாவில் ட்ரம்ப் சார்பு அரசத்தலைமையை தேர்தல் உருவாக்கியதைப் போலவே பிரேசிலிலும் அமேசன் நதி வளத்தை ட்ரம்ப் ஆசைதீர அள்ளிப்பருகும் வகையில் அமெரிக்க சார்புத்தலைமை தேர்தலில் வெற்றி பெறலாம் என்கிற நிலை காணப்படுகிறது. இதன்வழி பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா தென்னாபிரிக்க கூட்டாண்மை பங்காண்மைக் கட்டமைப்பான பிரிக்ஸினையும் உடைத்து அதன் பொதுப்பணமான பிரிக்ஸை இந்நாடுகள் அமெரிக்க டொலருக்குச் சமாந்திரமான வெளிநாட்டுப்பணமாற்று ஊடகமாக முன்னெடுத்த முயற்சிகளையும் முறியடிக்கும் பலத்தை அமெரிக்கா பெறலாம் என்பது ஆய்வாளர்களின் எதிர்வுகூறலாக உள்ளது. .

இந்நிலையில் இந்தியாவின் குளோபல் சவுத் சீனாவுடனான தனது கூட்டாண்மை பங்காண்மைகளை பலப்படுத்தும் முயற்சியை இந்தியா தனக்கும் சீனாவுக்கும் இடையில் உள்ள 3500 கிலோ மைல் நீள எல்லைப் பிரச்சினையையும் தள்ளிவைத்துவிட்டு இந்திய சீன நல்லிணக்கத்தை ஆசியப் பாதுகாப்பிலும் மத்திய கிழக்குக்கான துணைப்பாதுகாப்பிலும் முன்னெடுப்பதற்கான முயற்சிகளில் பலமாக இறங்கியுள்ளது. பொருளாதார மூலோபாயங்களை உருவாக்க பொருளாதாரத் தந்திரோபாயங்கள் வழியாக ஆசிய, ஆபிரிக்க கண்டங்களையும் தாண்டி ஐரோப்பிய அமெரிக்க கண்டங்களின் நாடுகளான பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, நோர்வே, கனடா போன்ற நாடுகளுடன் அவற்றுக்கான ஏற்றுமதிகளிலும் தமக்கான இறக்குமதிகளிலும் வரிச்சலுகைகள் திறன் பகிர்வுகள் வழி வர்த்தக ஒப்பந்தமின்றி பங்காண்மைக் கூட்டமைவுகள் மூலம் இந்தியா தன்னை உலகின் வல்லாண்மைகளில் ஒன்றாக முன்னிலைப்படுத்த முயன்று வருகிறது. இன்றைய உலகின் முக்கிய போர்முனைகளான ஈரான், உக்ரேன், டெல் அவிவ் உடனும் இந்தியா நேரடியான வெளிவிவகாரத் தொடர்புகளை வேகப்படுத்தி ஆழப்படுத்தி வருகிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் முனைவர் ஜெயசங்கர் அவர்கள் தனது இறைமையின் தனித்துவத்தைப் பேணிய நிலையில் அனைத்து நாடுகளுடனும் உலக வர்த்தக சமநிலையை பேணிட முயல்கிறது என ஆழமான விளக்கத்தையும் அளித்துள்ளார். இந்த வகையில்தான் இந்திய பிரதமர் மோடியை இஸ்ரேலிய பிரதமர் நெத்தன்யாகு இஸ்ரேல் சுதந்திர தினத்துக்கு தன்னுடன் இணைந்து கொடியேற்ற அழைத்தமையையும் புரிந்து கொள்ள முடிகிறது. இந்நிலையில்தான் இவ்வாரத்தில் சவூதி அரேபியாவில் இருந்து ராஜதந்திர நிலையில் இல்லாத தனது தூதரக அலுவலர்களை அங்கிருந்து வெளியேறுமாறு அமெரிக்கா அவசர ஆணை வழங்கியுள்ளது. அக்டோபர் 27ஆம் திகதிய இஸ்ரேல் தேர்தலுக்கான இறுதிக்கட்டப் பரப்புரையில் இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாகுவும் நவம்பர் 3ம் திகதிய அமெரிக்க ஆண்டின் நடுத்தவணையில் நடைபெறும் அமெரிக்க காங்கிரஸ் செனட் தேர்தல்களுக்கான 10 நாள் சூறாவளித் தேர்தல் பரப்புரையில் அமெரிக்க அரசத்தலைவர் ட்ரம்பும் படுவேகமாகச் சுழன்று வருகின்றனர்.

ஆயினும் அமெரிக்காவில் 2024 இல் அமெரிக்க மக்களின் நாளாந்த வாழ்க்கைச் செலவைக் குறைப்பேன், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவேன், அமெரிக்காவின் வெளிநாட்டுப் போர்களை நிறுத்துவேன் எனக் கூறி மக்களின் வாக்குகளைப் பெற்ற நிலையில் 21.10. 2026 இல் பணவீக்கம் 3.7 வீதமாக அதிகரித்த நிலையிலும் எரிவாயு கலனுக்கு 4.25 டொலர்களைத் தாண்டிய நிலையிலும் கச்சா எண்ணெய் பரலுக்கு 110 டொலரை அதியுச்ச விலையை அடைந்த நிலையிலும் ஈரான் மேலான அமெரிக்க இஸ்ரேல் கூட்டுப்போரில் பலத்த நிதிவளத்தை தொழில்நுட்ப வளத்தை இழந்த நிலையிலும் கூடவே மனிதவலுவும் குறிப்பிடத்தக்கதாக மாறிவரும் நிலையிலும் அமெரிக்கா உள்ளது என்பதே யதார்த்த அரசியலாகவுள்ளது. நியூயோர்க் டைம்ஸ் சியன்னா (Siena) கல்லூரி இணைந்து நடத்திய கருத்துக்கணிப்புகளின் படி 21. 10. 2026 இல் ட்ரம்பின் பொருளாதாரக் கொள்கைகளை 36 வீதமானவர்களே ஏற்றுக்கொள்கின்றனர். 3494 வாக் காளர்களிடையே நடாத்தப்பெற்ற கணக்கெடுப்பில் 59 வீதமானவர்கள் ட்ரம்பின் பதவிப் பொறுப்புகளைக் கையாளும் முறையை எதிர்த்துள்ளனர். 52 வீதமானவர்கள் டெமொகிரட்சுக்கே தாங்கள் வாக்களிக்கப் போவதாகக் கூறியுள்ளனர். எரிவாயு விலைகளை 73 வீதமானவர்களும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை 69 வீதமானவர்களும் பொருளாதாரக் கொள்கைகளை 64 வீதமானவர்களும் ஈரான் போரை 65 வீதமானவர்களும் எதிர்த்துள்ளனர்.

இதனால் மிட்டேர்ம் தேர்தல்கள் ட்ரம்பின் குடியரசுக் கட்சிக்கு தோல்வியை ஏற்படுத்தி காங்கிரசிலும் செனட்டிலும் அவரது கட்சியின் கட்டுப்பாடு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பல மில்லியன்கள் தேர்தலில் செலவிடப்படும் நிலையில் தன்னால் வெற்றிபெற முடியமென ட்ரம்ப் நம்புகின்றார். ஆயினும் தேர்தல் தோல்வியைத் தவிர்க்கப் பல்வேறு விதமான வழிகளில் வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்கும் வீதத்தைக் குறைக்கும் முயற்சிகள் ட்ரம்பால் அறிவிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மத்திய கிழக்கில் ஏதாவது சூரத்தனம் காட்டி தேர்தலில் வாக்காளர் கவனத்தைத் திருப்பவோ அல்லது தேர்தல் முடிந்த கையுடனேயே ஈரான் மேல் குண்டுகளின் தாய் எனப்படும் 26,000 பவுண்டுகள் எடையுள்ள அணுக்குண்டல்லாத பேரழிவுக் குண்டை வீசி போரை முடிவுக்குக் கொண்டு வரவோ ட்ரம்ப் முயற்சிக்கலாம் என்ற அச்சம் உலகில் உள்ளது. இத்தகைய சூழலில் வல்லாண்மைகளின் மூவொரு ஒருங்கிணைப்பு சிறுதேசிய இனங்களின் இறைமைக்கு பேராபத்தாக மாறி வருகிறது. இவற்றை ஆராய்ந்து ஏற்புடைய முறைமைகளைக் கண்டறிந்து செயற்பட வல்ல நிபுணத்துவக் கட்டமைப்புகள் ஈழத்தமிழர்களுக்கும் காலத்தின் உடனடித் தேவையாக உள்ளதென்பதை இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

**ஆசிரியர்**




## விதுரன்

இந்தியப் பெருங்கடலின் மிக முக்கிய மூலோபாயக் கடல்சார் மையமாகத் திகழும் கொழும்புத் துறைமுகம், தற்காலத்தில் உலக வல்லரசுகளின் பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் போட்டிக்களமாக உருவெடுத்துள்ளது.



அண்மையக் காலத்தில் கொழும்புத் துறைமுகத்தைச் சுற்றி நிகழ்ந்துள்ள மூன்று முக்கிய அபிவிருத்திகள்—சீன மேர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் வெளியேற்றம், அமெரிக்காவின் 17மில்லியன் டொலர் டிஜிட்டல் தொழில்நுட்ப மானியம், மற்றும் சீன வங்கியின் கொழும்பு கிளையின் யுவான் தீர்வு வங்கி சேவை—இலங்கையின் வெளியுறவுக் கொள்கைக்கும் சர்வதேச வர்த்தகத்திற்கும் பாரிய இராஜதந்திரச் சவால்களையும் வாய்ப்புகளையும் ஒருங்கே தோற்றுவித்துள்ளன.

2022ஆம் ஆண்டின் நசுக்கும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் இலங்கையில் அறிவிக்கப்பட்ட மிகப்பெரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் திட்டமாகத் திகழ்ந்தது ‘தெற்காசிய வணிக மற்றும் தளபாட மையம்’ (South Asia Commercial and Logistics Hub). சுமார் 280மில்லியன் முதல் 392மில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான முதலீட்டில், 50 ஆண்டுகால கட்டியெழுப்பி-இயக்கி-மாற்றித் தரும் ஒப்பந்த அடிப்படையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது.




இதில் சீன மேர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனம் 70 சதவீதப் பங்குகளையும், இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் அக்சஸ் இஞ்ஜினியரிங் ஆகியன தலா 15 சதவீதப் பங்குகளையும் கொண்டிருந்தன.

கொழும்புத் துறைமுகத்தின் மையப்பகுதியில் 150,000 சதுர மீற்றர் பரப்பளவில், 8 மாடிகளைக் கொண்ட அதிநவீன சேமிப்பக வளாகமாக உருவெடுக்கவிருந்த இத்திட்டம், குறைந்தபட்சம் 1,800 நேரடி வேலைவாய்ப்பு களையும் 10,500 மறைமுக வேலைவாய்ப்பு களையும் உரு வாக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும், நிலக்கையகப்படுத்துதலில் நிலவிய சட்டச் சிக்கல்கள், எல்லைப் பிரச்சினைகள் மற்றும் கொழும்புத் துறைமுக நுழைவு மேம்பால அதிவேக நெடுஞ் சாலைக் கட்டுமானத் தாமதங்கள் காரணமாக இத்திட்டம் முடங்கியது.

இதன் விளைவாக, சீன நிறுவனம் இத் திட்டத்திலிருந்து முழுமையாக விலகியுள்ளதுடன், ஒப்பந்த விதிமுறைகளின்படி இலங்கை துறைமுக அதிகாரசபை 21.9 மில்லியன் அமெரிக்க டொலரை 30 நாட்களுக்குள் இழப்பீடாக வழங்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே 2015இல் துறைமுக நகரத் திட்ட இடை நிறுத்தத்திற்காக 143 மில்லியன் டொலர் இழப்பீட்டுக் கோரிக்கைக்குப் பதிலாக 110 ஹெக்ரெயர் நிலத்தை 99 ஆண்டுகால குத்தகைக்கு வழங்கியமையும், 2021இல் தரமற்ற இயற்கை உரப் பிரச்சினையில் 6.9மில்லியன் டொலரை இழப்பீடாக அளித்தமையையும் தொடர்ந்து, சீன நிறுவனமொன்றிற்கு இலங்கை அரசாங்கம் இழப்பீடு வழங்கும் மூன்றாவது நிகழ்வாக இது பதிவாகியுள்ளது.

சர்வதேச முதலீட்டாளர்கள் மத்தியில் நாட்டின் உள்கட்டமைப்பு மற்றும் ஒழுங்குமுறைச் சூழல் மீதான நம்பிக்கையைக் குலைக்கும் இந்த நிகழ்வு, அரசாங்கத்தின் அந்நியச் செலாவணி கையிருப்புக்கும் பெரும் நெருக் கடியை ஏற்படுத்தியுள்ளது.

சீன நிறுவனம் வெளியேறிய அதேதருணத்தில், கொழும்புத் துறைமுகத்தின் டிஜிட்டல் அமைப்புகளை நவீனமயமாக்குவதற்காக அமெரிக்கா 17மில்லியன் அமெரிக்க டொலர் மானியத்தை அறிவித்துள்ளமை குறிப் பிடத்தக்க இராஜதந்திரத் திருப்பமாகும்.

அமெரிக்கத் தூதர் எரிக் ஸ்டெர்ன் மேயர் அறிவித்துள்ள இந்த நிதியுதவி, இலங்கையின் கடல்சார் ஒற்றைச் சாளரம் (Maritime Single Window) மற்றும் துறைமுக சமூக அமைப்பை (Port Community System) நவீனமாக்குவதை நோக்க மாகக் கொண்டுள்ளது.

துறைமுக அதிகாரசபை, சுங்கம், கப்பல் நிறு வனங்கள் மற்றும் முனைய செயல்பாட்டாளர்களை ஒரே டிஜிட்டல் வலையமைப்பில் இணைப்பதன் மூலம் ஆவணக் கையாளுதல் தாமதங்களைக் குறைத்து, விநியோகச் சங்கிலியைப் பாதுகாப்பதே அமெரிக்காவின் முதன்மை இலக்காகும்.

இந்த நகர்வை வெறும் தொழில்நுட்ப உதவி யாக மட்டும் சுருக்கிப் பார்க்க முடியாது. கொழும்புத் துறைமுகத்தின் உள்கட்டமைப்பில் சீனாவின் ஆதிக்கத் தைக் கட்டுப்படுத்தவும், இந்தியப் பெருங்கடலின் வர்த்தகப் பாதைகளில் தன் பிடியை உறுதிப்படுத்தவும் அமெரிக்கா டிஜிட்டல் இராஜதந்திரத்தைக் கையாளுவதை இது வெளிப்படுத்துகிறது.

சீனா உள்கட்டமைப்பு சார்ந்த முதலீடுகளில் கவனம் செலுத்தும் அதேவேளையில், அமெரிக்கா தரவு முகாமை மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பைத் தன் வசப்படுத்துவதன் மூலம் கொழும்புத்துறைமுகத்தின் செயற்பாட்டு நெறி முறைகளில் தனது செல்வாக்கைச் செலுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

சீன நிறுவனத்தின் வெளியேற்றம் கொழும்புத் துறைமுகத்தை ஒரு முழுமையான ‘மதிப்புக்கூட்டு தளவாட மையம் (Value-added Logistics Center - VAL) மாற்றுவதைத் தாமதப் படுத்தியுள்ளது.

இந்த இடைவெளி பிராந்தியக் கடல்சார் வர்த்த கத்தில் இந்தியாவின் நிலையை பலப்படுத்த வாய்ப் பளித்துள்ளது. தற்போது இந்தியாவின் கடல்சார் சரக்குக் கையாளுகையில் சுமார் 60 முதல் 70சதவீதம் கொழும்புத் துறைமுகம் வழியாகவே மீள்விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது இந்தியா, கேரளாவின் விழிஞ்ஞும் சர்வதேச ஆழ்கடல் துறைமுகம் மற்றும் அந்தமான் நிக்கோபாரின் கலாத்தியா குடா ஆகிய பகுதிகளில் பாரிய கொள்கலன் மாற்று முனையங்களை வேகமாக உருவாக்கி வருகிறது.

கொழும்புத் துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள உள்கட்டமைப்புத் தொய்வு, சர்வதேசக் கப்பல் நிறுவனங்களை இந்தியாவின் புதிய துறைமுகங்களை நோக்கி ஈர்க்கும் சூழலை உருவாக்கியுள்ளது.



மேலும்,திறந்த போட்டி ஏலம் மூலம் இத்திட்டத்திற்கு புதிய முதலீட்டாளர்களை ஈர்க்க இலங்கை அரசு முயலும் நிலையில், ஏற்கனவே மேற்கு கொள்கலன் முனையத்தை உருவாக்கி வரும் இந்தியாவின் அதானி குழுமம் அல்லது இந்திய சார்பு சர்வதேசக் கூட்டணிகள் இத்திட்டத்தைக் கைப்பற்ற அதிக வாய்ப்புகள் உள்ளன.

இது கொழும்புத் துறைமுகத்தில் சீனாவின் ஆதிக்கத்தைக் குறைத்து, இந்தியாவின் வர்த்தக மற்றும் மூலோபாயச் செல்வாக்கை அதிகரிக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

நிதித்துறையைப் பொறுத்தவரை, சீன வங்கியின் கொழும்பு கிளை இலங்கையின் முதலாவது ‘யுவான் தீர்வு வங்கியாக’ செயற்படத் தொடங்கியுள்ளமை மற்றொரு பிரதான மைல்கல்லாகும். உலகளவில் அமெரிக்க டொலரின் ஆதிக்கத்தைக் குறைத்து, தனது மாற்று நிதி அமைப்பை வலுப்படுத்தும் சீனாவின் நீண்டகால உலகளாவிய உத்தியின் ஒரு பகுதியாகவே அதனை பார்க்க வேண்டியுள்ளது.




பொருளாதார ரீதியாக, இலங்கை இறக்குமதி யாளர்கள் டொலருக்கு மாறாமல் நேரடியாக யுவானில் வர்த்தகம் செய்வதால் இடைத்தரகு வங்கிக் கட்டணங்கள் குறையும். மேலும், கடுமையான டொலர் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் இலங்கைக்கு, சீனாவுடனான வர்த்த கத்திற்கு டொலரைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைத்து, மத்திய வங்கியின் அந்நியச் செலாவணி கையிருப்பைப் பாதுகாக்கும் வாய்ப்பை இது அளிக்கிறது. கொழும்பு துறைமுக நகரம் போன்ற சிறப்பு பொருளாதார வலயங்களில் சீன முதலீடுகளை நேரடியாக ஈர்க்கவும் இது உதவும்.

தொடர்ச்சி: பக்கம் 13




பா.அரியநேத்திரன்

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் பௌத்த பிக்குகள் குழுவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் கடந்த 16/10/2026 தொடக்கம் தொடர்கிறது.



ஏற்கனவே கடந்த 16ஆம் திகதி மேற்படி பிக்குகள் குழுவினர் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஒன்று கூடிப் போராட்டத்தை ஆரம்பித்ததுடன், அதனைத் தொடர்ந்து புத்தசாசன அமைச்சுக்குச் சென்று அமைச்சின் செயலாளருடன் பேச்சில் ஈடுபட்டனர்.

எனினும், அந்தப் பேச்சு எவ்வித தீர்வுமின்றித் தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து, தமது கோரிக்கைகளுக்குத் தகுந்த பதில் கிடைக்கும் வரை விகாரமகாதேவி பூங்காவிலேயே தங்கியிருந்து போராட்டத்தைத் தொடரவுள்ளதாகப் பிக்குகள் அறிவித்தனர்.

கலகொட அத்தே ஞானசார தேரர் சிறையிலிருந்து முழுமையாக விடுதலை செய்யப்படும் வரை தாம் பூங்காவை விட்டு வெளியேறப் போவதில்லை என்று சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ள பிக்குகள் குழுவினர் உறுதியளித்துள்ளனர்.

ஆனால், பொதுமன்னிப்பு வழங்கப்பட மாட்டாது என நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார மற்றும் ஜனாதிபதியின் சட்டப் பணிப்பாளர் ஜே. எம். விஜயபண்டார ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



மகாநாயக்கர்களைச் சந்தித்த ஜனாதிபதி அநுரவும் தாம் சட்டத்தின் அடிப்படையிலேயே இந்த விவகாரத்தைப் பார்ப்பதாகவும், யாருக்காகவும் சட்டத்தைத் தாம் கையில் எடுக்கப்போவதில்லை எனவும், சிறைச்சாலையில் உள்ள பிக்குகளின் ஆடை தொடர்பாகக் குழு அமைத்து ஆலோசனையைச் சட்டரீதியாக மாற்றுவதே சரி எனவும் கூறினார்.

கலகொட அத்தே ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பு என்ற பேச்சுக்கே தற்போதைய ஜனாதிபதியிடம் வாய்ப்பில்லை என்பதே உண்மை.

ஆனால், கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் பௌத்த பிக்குகள் குழுவினர் போராட்டத்தைக் கைவிடுவதாக இல்லை. இவர்களுக்குப் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பொதுஜன பெரமுன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பிலவின் பிவிதுரு ஹெல உறுமய உட்பட சில எதிர்க்கட்சிகள் உள்ளதாகத் தெரிகிறது.

இவர்களின் நோக்கம் அநுர அரசை எதிர்த்து ஆட்சியைக் குழப்பி, தாம் அடுத்து வரும் தேர்தலில் பதவிகளைப் பெறுவது மட்டுமே. அதற்காக இந்தப் பிக்குகளைக் கருவியாகப் பயன்படுத்துகின்றனர்.



இந்தப் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் யார், ஏன் அவர் சிறையில் வைக்கப்பட்டார், அவர் உண்மையில் யோக்கியவானா அல்லது அயோக்கியவானா என்பதைப் புரிந்துகொள்வது அவசியம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா வழங்கிய பொதுமன்னிப்பானது "தன்னிச்சையானது, பொது நம்பிக்கை மற்றும் இயற்கை நீதியின் விதிகளை மீறுவதாகும், மேலும் அவரது அதிகார வரம்பை மீறிய செயலாகும்" என்று தீர்ப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அவருக்கு எதிராகச் சுமார் 20 குற்றச்சாட்டு சம்பவங்கள் உள்ளன.

1. 2000ஆம் ஆண்டில் கொழும்பு போக்குவரத்து நீதிமன்றத்தில் மதுபோதையில் வாகனத்தை ஓட்டியது உள்ளிட்ட 9 குற்றச்சாட்டுகளுக்காக (வழக்கு எண்: 6315/2000) செப்டெம்பர் 20 அன்று இவருக்கு ரூ. 12,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
2. 2012 ஜூன் மாதம் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிராகக் கடுமையான இனவாத மற்றும் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசிய காணொளி வெளியாகிச் சர்ச்சையை ஏற்படுத்தியது.
3. 2014 ஏப்ரல் 9 அன்று 'ஜாதிக பல சேனா' அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் நுழைந்து வட்டரக விஜித தேரரை அச்சுறுத்தியது மற்றும் குர்ஆன் குறித்து சர்ச்சைக்குரிய கருத்து வெளியிட்டது தொடர்பான கோப்புகள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டன.
4. 2014 ஜூன் 15 அன்று அளுத்கம கூட்டத்தில் இவர் ஆற்றிய உரையைத் தொடர்ந்து அளுத்கம, தர்கா நகர் மற்றும் பேருவளை பகுதியில் பரவிய வன்முறையில் 4 பேர் உயிரிழந்தனர்.
5. 2014 ஜூன் 26 அன்று கைது செய்யப்பட்ட 13 பிபிஎஸ் உறுப்பினர்களை விடுவிக்காவிட்டால் தற்கொலை செய்து கொள்வதாக அச்சுறுத்தினார்.
6. 2016 ஜனவரி 25 அன்று பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன வழக்கு (எண்: B 7417/10) ஹோமாகம நீதிமன்றத்தில் நடைபெற்றபோது, அரச சட்டத்தரணியை அச்சுறுத்தியதற்காகவும் சந்தியா எக்னெலிகொடவை அச்சுறுத்தியதற்காகவும் நீதிமன்ற அவமதிப்பு, பணிக்கு இடையூறு விளைவித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டார்.
7. 2016 ஜூலை 16இல் குரகல/ஜைலானி மற்றும் கிருளப்பனை ஊடகச் சந்திப்பில் இஸ்லாத்தை விமர்சித்தது தொடர்பாக 2016இல் இரு தனித்தனி வழக்குகள் தொடரப்பட்டன.
8. 2017 ஜூன் 21 அன்று வெலிக்கடை சம்பவத்திற்காகக் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். 2018 பெப்ரவரியில் திகன கலவரத்தின்போதும் இவரது வருகை பதிவானது.



9. 2018 மே 24 அன்று ஹோமாகம நீதிமன்றம் சந்தியா எக்னெலிகொடவை அச்சுறுத்திய வழக்கில் இவரைக் குற்றவாளியாக அறிவித்து, 2018 ஜூன் 14 அன்று 6 மாதக் கடுங்காவல் தண்டனையும் ரூ. 50,000 நஷ்டஈடும் விதித்தது.
10. 2018 ஆகஸ்ட் 8 அன்று மேல்முறையீட்டு நீதிமன்றம் ஹோமாகம சம்பவ நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் 4 குற்றச்சாட்டுகளுக்காக இவருக்கு 6 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து வெலிக்கடை சிறையில் அடைத்தது.



11. 2019 மே 23 அன்று அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவருக்கு ஜனாதிபதிப் பொதுமன்னிப்பு வழங்கி விடுவித்தார்.
12. 2021 அக்டோபர் 26 அன்று அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவரை 'ஒரே நாடு, ஒரே சட்டம்' ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவராக நியமித்தார். இதற்கான அறிக்கை 2022 ஜூன் 29 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.
13. 2023 அக்டோபர் 2 அன்று பம்பலப்பிட்டி வீடமைப்பு விவகாரம் (இனோகா சேனாநாயக்கவின் முறைப்பாடு)

தொடர்ச்சி: பக்கம் 12




தீபச்செல்வன்

2011ஆம் ஆண்டு, ஒரு பத்துவயதுச் சிறுவன் இலங்கை அமைச்சரின் காலில் விழ மறுத்தான். முல்லைத்தீவைச் சேர்ந்த சேதுராகவன் என்ற அந்தச் சிறுவன், மேடையில் பரிசைப் பெறுவதற்காக அமைச்சரின் காலில் விழ வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டபோதும் அதற்கு இணங்கவில்லை. பரிசைப் பெறுவதற்காக ஒரு குழந்தை அதிகாரத்தின் காலில் விழவேண்டுமா என்ற கேள்வியை அந்தச் சிறுவனின் மறுப்பு உணர்த்தியது. அந்தக் காட்சி அப்போது பெரும் கவனத்தைப் பெற்றது. ஒரு குழந்தையின் சுயமரியாதை அதிகாரத்தின் முன்னால் தலைகுனிய மறுத்தது. அப்போது அந்தச் சிறுவனைப் பற்றிய எழுதிய போது இலங்கை அரசின் தேடுதலும் அச்சுறுத்தலும் நிகழ்த் தப்பட்டது.

### குழந்தைகள் மீதான விசாரணை

இப்போது, பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர், செம் மணியில் புதைக்கப்பட்ட குழந்தைகளுக்கு நீதி கோரி மற்றொரு சிறுவன் விநோத உடையணிந்து நிற்கிறான். அந்தக் குழந்தையின் வெளிப்பாடும் இப்போது காவல்துறை விசாரணைக்குரியதாக மாறியிருக்கிறது. காலில் விழ மறுத்த குழந்தைக்கும், புதைக்கப்பட்ட குழந்தைகளுக்காக நீதி கேட்ட குழந்தைக்கும் இடையில் காலம் மாறியிருக்கிறது. ஆனால் தமிழர் தாயகத்தில் குழந்தைகள் அதிகாரத்திடம் கேட்க வேண்டிய கேள்விகளும் காண்கிற காட்சிகளும் மாற வில்லை.



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்கிலுள்ள முன்பள்ளியின் விளையாட்டு விழாவில், செம்மணியில் புதைக்கப்பட்ட குழந்தையின் துயரத்தை வெளிப்படுத்தும் வகையில் ஒரு சிறுவன் வேடமணிந்திருந் தான். “பல ஆண்டுகளுக்கு முன்னர் அம்மாவின் மார் பில் பால் அருந்திக்கொண்டிருந்தபோது என்னைப் புதைத்து விட்டார்கள். எனக்கு நீதி கிடைக்குமா?” என்ற வாசகத் தைத் தாங்கியிருந்த அவனது தோற்றம் சமூக வலைத் தளங்களில் பரவியது. அதனைத் தொடர்ந்து சிறுவ னின் பெற்றோரையும் முன்பள்ளி ஆசிரியையையும் மருதங் கேணிப் காவல்துறையினர் விசாரணைக்கு அழைத்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

### குழந்தைகளின் கல்லறைகளில் புதைக்கப்பட்ட வரலாறு

ஒரு குழந்தை விளையாட்டு விழாவில் எதை வெளிப்படுத்த வேண்டும் என்பதைக்கூட ஆட்சியாளர்கள் தீர்மானிக்கத் தொடங்கும்போது, அந்தச் சமூகத்தின் சுதந்திரம் எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் குறித்து அதிகம் நாம் சொல்லத் தேவையில்லை. விநோத உடைப் போட்டி என்பது குழந்தைகளின் ஆக்கத்திறனுக்கான வெளிப்பாடு. ஆனால் தமிழர் தாயகத்தில் ஒரு குழந்தையின் கற்பனைக்குள் செம்மணிப் புதைகுழியும், மண்ணுக்குள் புதைக்கப்பட்ட குழந்தைகளின் கேள்விகளும் தாயின் மார்பில் பால் அருந்திய குழந்தை எவ்வாறு புதைக்கப்பட்டது என்ற துயரமும் வருகிறது என்றால் அது அந்தக் குழந்தைகளின் தவறல்ல. உண்மையில் இது தனது வரலாற்றை இன்னும் புரிந்துகொள்ளவும் நீதியை இன்னும் எதிர்பார்க்கவும் காத்திருக்கும் ஒரு சமூகத்தின் நினைவாகவும் வெளிப் பாடாகவும் இருக்கிறது.



செம்மணி இன்று ஒரு புதைகுழியின் பெயராக மாத்திரமின்றிக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், படுகொலை செய்யப்பட்டவர்கள், நீதிக்காகக் காத்திருக்கும் குடும்பங்கள் எனத் தமிழர் தாயகத்தின் தீர்க்கப்படாத வரலாற்றின் சாட்சியமாகும். அங்கு அகழ்வுப் பணிகளின்போது மனித எச்சங்களுடன் சிறுவர்களின் காலணிகள், பாடசாலைப் பைகள், பொம்மைகள், குழந்தைக்கான பால்போத்தல் போன்ற பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 2026 ஆகஸ்ட் நடுப்பகுதிக்குள் 580க்கும் அதிகமான மனித எச்சத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்ததாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்தது. ஆனால் எச்சங்கள் மீட்கப்படுவது மட்டும் நீதியாகிவிடாது. அவர்கள் யார், எவ்வாறு இறந்தார்கள், அவர்களது மரணங்களுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பவை கண்டறியப்பட வேண்டும்.




### இறுதிப்போரில் குழந்தைகளுக்கு எதிரான அநீதிகள்

போரின் இறுதிக்காலத்தில் கொல்லப்பட்ட குழந்தைகள் குறித்தும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைகள் கவலை வெளியிட்டுள்ளன. 2009ஆம் ஆண்டின் இறுதிக்கட்ட மோதல்களில் நூற்றுக்கணக்கான குழந்தைகள் கொல்லப் பட்டமை தொடர்பாகப் போதுமான விசாரணைகள் நடத்தப்படவில்லையென ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் குழு கவலை தெரிவித்திருந்தது. அதேபோன்று, பல ஆண்டுகளாகத் தொடரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இன்னும் தமது உறவுகளின் நிலை என்ன வென்று அறியாமல் காத்திருக்கின்றன. அவர்களில் குழந்தைகளும் உள்ளனர். தமது குழந்தைகளைத் தேடி முதுமையடைந்த பெற்றோர்களும் உள்ளனர்.

இப்படியான வரலாற்றுச் சூழலிலும் நிகழ்காலப் பின்னணியிலும் இன்றைய தமிழ்க் குழந்தைகள் வளர்கிறார்கள். அவர்கள் பாடசாலைக்குச் சென்று தமது சமூக நினைவுக்குள் போரின் படங்களும் காணாமல் போனவர்களின் புகைப்படங்களும் புதைகுழிகளில் மீட்கப் படும் குழந்தைகளின் பொருட்களும் சேர்கின்றன.



### குழந்தையின் குரலுக்கு ஏன் அச்சம்?

செம்மணிக்காக நீதி கேட்ட சிறுவனின் வெளிப்பாடும் ஒரு குழந்தையின் சிந்தனைச் சுதந்திரமாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக விசாரணை நடக்கும்போது குழந்தைகளின் வெளிப்பாடுகளும்கூட பாரபட்சமும் சந்தேகமும் கொண்டு பார்க்கப்படுவது என்பது கொஞ்சமும் ஆரோக்கியமற்ற நிலையாகும். அத்துடன் குழந்தைகளின் குரலுக்கே அச்சப்படுபவர்கள், ஒரு இனத்தின் குரலை எப்படி அடக்கி ஒடுக்குவார்கள் என்பதும் புலப்படுத்தப்படுகிறது. குழந்தைகளுக்கு வரலாற்றைப் பேசும் உரிமை இருக்கிறது. அவர்கள் தமது சமூகத்தில் நிகழ்ந்த அநீதிகளைப் பற்றிக் கேள்வி கேட்கலாம். தமது மண்ணில் புதைக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும் என்று கூறலாம். அந்தக் கேள்விகள் அதிகாரத்துக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தினாலும், அவை குழந்தைகளின் குரலை மௌனமாக்குவதற்கான காரணமாகிவிட முடியாது.

தமிழர் தாயகத்தின் குழந்தைகள் தமது வரலாற்றை மறந்து வளர வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்களின் பெற்றோர்கள் இன்னும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடுகிறார்கள். அவர்களின் சமூகத்தில் புதை குழிகள் அகழப்படுகின்றன. அவர்களின் பாடசாலைப் பைகள், பொம்மைகள், குழந்தைகளின் பொருட்கள் மனித எச்சங்களுடன் மீட்கப்படுகின்றன. இத்தகைய காட்சி களுக்கு நடுவில் வளர்கிற குழந்தைகள் கேள்விகள் கேட் பார்கள். அந்தக் கேள்விகளைத் தடுக்க முயல்வதைவிட, உண்மையையும் வரலாற்றையும் பொறுப்புடன் புரிந்து கொள்வதுதான் சரியான அணுகுமுறையாகும்.

### குழந்தைகளின் மனவெளிப்பாடு

சேதுராகவன் அமைச்சரின் காலில் விழ மறுத்தபோது ஒரு குழந்தையின் சுயமரியாதை வெளிப்பட்டது. இன வழிப்புக்குப் பிந்தைய சூழலில் அவன் விழ மறுத்த விடயத்திற்கும் செம்மணிக்காக வேடமணிந்த சிறுவன் ஒரு குழந்தையின் நீதிக்கான ஏக்கத்திற்குள் உள்ள தொடர்பை அரசும் அதிகாரிகளும் உணர வேண்டும். இவ்விரு நிகழ்வுகளுக்கும் இடையில் பதினைந்து ஆண்டுகள் கடந்தாலும், குழந்தையின் மனமும் கேள்வியும் ஒரே வகையிலேயே தொடர்கிறது. அத்துடன் இரண்டு

தொடர்ச்சி: பக்கம் 12



# கிழக்கு மண்ணில் தமிழர்களின் இருப்பைப் பலவீனப்படுத்தும் திட்டமிட்ட செயல் தொடர்கின்றது

மட்டு.நகரான்



வடகிழக்கு என்பது வெறுமனே நிலத்தினை மட்டும் அடிப்படையாக கொண்ட பகுதி அல்ல அது தனித்துவமான அடையாளங்களையும் கலைகலாசார பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் கொண்ட பகுதியாகும். இப்பகுதியின் பண்பாட்டு விழுமியங்கள் என்பது காலம் காலமாக பாதுகாக்கப்பட்டுவருகின்றது.

அதன் காரணமாகவே உலகெங்கும் உள்ள தமிழர்களினால் இலங்கையின் வடகிழக்கு பிரதேசம் தமிழ் தேசியத்தின் அடையாளமாக நோக்கப்படுகின்றது.

இந்த அடையாளத்தினை பாதுகாப்பதற்கே கடந்த 75வருடத்திற்கு மேலாக வடகிழக்கில் தமிழர்கள் பல்வேறு போராட்டங்களை சந்தித்து பல்வேறு அழிவுகளை எதிர்கொண்டதுடன் சொந்த நாட்டிலேயே அகதிகளாக மாறும் நிலைமையும் ஏற்பட்டது.இந்த போராட்டங்களும் இழப்புகளும் என்ன நோக்கத்திற்காக எதிர்கொள்ளப்பட்டது என்பதை இன்றைய சமூகம் உணர்ந்துகொள்வது மிகவும் அவசியமாகும்.



இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழ் பேசும் மக்களின் தாயகப் பகுதியில், வரலாற்று ரீதியாக தமிழ் தேசிய போராட்டம் என்பது மக்களின் வாழ்வியல், அரசியல் மற்றும் பண்பாட்டு அடையாளத்தோடு பிரிக்க முடியாதவாறு பிணைந்துள்ளது. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட சூழலில், இன்றைய தலைமுறை இளைஞர்களின் சிந்தனைகள், செயல்பாடுகள் மற்றும் தமிழ் தேசிய போராட்டத்தின் தற்போதைய வடிவம் குறித்து ஆராய்வது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

யுத்தம் மௌனிக்கப்பட்டு 17 வருடங்கள் கடந்துள்ள நிலையில் வடகிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில்பெருமளவான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை காணமுடிந்தது.யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் தமது கலைகலாசாரங்களையும் பண்பாடுகளையும் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் நிறுத்தப்பட்டதனால் அதன் மீதான தாக்கம் என்பதுஇன்று அதிகரித்த நிலையில் உள்ளதை உணரமுடிகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் யுத்தம் நடைபெற்ற காலத்திலும் அதற்கு பிந்திய காலத்திலும் இளைஞர்களின் மனநிலையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன.

தமிழர்களின்உரிமைக்கானஆயுதப்போராட்டத்தில் கிழக்கு மாகாண தமிழ் இளைஞர்களின் பங்களிப்பினை தடுப்பதற்காக ஒட்டுக்குழுக்கள் மற்றும் அரச புலனாய்வு கட்டமைப்புகளினால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மது பானங்களை இளைஞர்கள் பெற்றுக்கொடுக்கும் வகையில் மதுபானசாலைகளை அமைக்கும் பணிகளை ஒட்டுக்குழுக்களைக்கொண்டு முன்னெடுத்திருந்ததுடன் இளைஞர்களைபல்வேறுவழிகளில்திசைதிருப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.



கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் சுயாட்சி, நில உரிமை மற்றும் கலாச்சார அடையாளங்களைப் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட தமிழ் தேசிய போராட்டம், வரலாற்று ரீதியாகப் பல சவால்களை எதிர்கொண்டு வந்துள்ளது. அதில் மிக முக்கியமானது, கிழக்கில் தமிழ் தேசிய விழிப்புணர்வையும் அதன் கூட்டு வீரியத்தையும் சிதைப்பதற்காக, இளைஞர்களின் ஆற்றலை மாற்று திசைகளில் திசை திருப்ப திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட பல்வேறு நுட்பமான செயற்பாடுகளாகும்.

போருக்குப் பின்னரான காலத்தில், குறிப் பாக கிழக்கின் பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி இளைஞர்களை அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்விலிருந்து விலக்கி வைக்கும் முயற்சிகள் தீவிரமடைந்தன. வேலைவாய்ப்பின்மை மற்றும் வறுமையைப் பலவீனமாகப் பயன்படுத்தி, இளைஞர்களின் கவனத்தை வாழ்வாதாரப் போராட்டங்களுக்குள் மட்டுமே முடக்குவதும், தற்காலிகப் பொருளாதாரச் சலுகைகள் மூலம் அவர்களைத் தேசியச் சிந்தனைகளிலிருந்து அகற்றுவதும் முதன்மைச் செயற்பாடுகளாக அமைந்தன.

இதன் தொடர்ச்சியாக, இளைஞர் சமூகத்தின் சிந்தனைத் திறனையும் சமூகப் பொறுப்பையும் அழிக்கும் நோக்கில் போதைப்பொருள் கலாச்சாரம் மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டதாகச் சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். கஞ்சா, போதை மாத்திரைகள் மற்றும் ஐஸ் போன்ற உயிர்க்கொல்லி போதைப்பொருட்களின் தாராள புழக்கம், இளைஞர்களை அடிமைப்படுத்தி,அவர்களைத்தங்களின்உரிமைகளுக்காகக் குரல்கொடுக்க முடியாத அவல நிலைக்குத் தள்ளியுள்ளது. மேலும், ஊர் சார்ந்த பிராந்திய முரண்பாடுகள், வாள்வெட்டு மற்றும் குழு மோதல்கள் போன்றவற்றைத் தூண்டிவிடுவதன் மூலம் இளைஞர்களின் ஆற்றல் உட்கட்சி மற்றும் உள்சமுதாய மோதல்களில் வீணடிக்கப்பட்டது.

குறிப்பாக மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசிய சிந்தனையினை கிழக்கு மாகாண தமிழ் இளைஞர்களில் இருந்து அகற்றி அவர்களின் சிந்தனையை தடுப்பதற்கான பல்வேறு செயற்பாடுகள் மிகவும் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அரசியல் ரீதியாக, இளைஞர்களிடையே பிராந்தியவாத உணர்வுகளைத் தூண்டிவிட்டு, வடக்கு-கிழக்கு தமிழ் தேசிய ஒற்றுமையைப் பிளவுபடுத்தும் முயற்சிகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. பாரம்பரியக் கலைகள், விளையாட்டு மற்றும் கலாச்சார விழிப்புணர்வுகளை வழங்கி வந்த உள்ளூர் அமைப்புகளின் செயல்பாடுகள் முடக்கப்பட்டு,அதற்குப் பதிலாகப் பயனற்ற பொழுதுபோக்கு அம்சங்களும் சமூக வலைத்தளங்களின் தவறான பயன்பாடுகளும் இளைஞர் மத்தியில் மேலோங்கச் செய்யப்பட்டன.



இன்று இதே நிலைமைகள் மிக அதிகரித்து வருவதை காணமுடிகின்றது.ஆலயங்களில் நிகழ்வுகள் நடைபெறும்போது போதைப்பொருள் பாவனையினைக் கொண்டுள்ள இளைஞர்கள் குழுவாக வருகைதந்து தவறான செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிலை அதிகரித்துவருகின்றது.இதேபோன்று பல்வேறுபட்ட தவறான செயற்பாடுகள் இடம்பெற்றுவருவதுடன் இவற்றின் பின்னணிகளாக கொழும்பு அல்லதுவேறு பகுதிகளிலிருந்து முன்னெடுக்கப்பட்டுவரும் பின்புலமான செயற்பாடுகளே காரணமாக அமைவதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்னெடுக்கப்படுகின்றன.



இவற்றிற்கு மேலாக கிழக்கில் தற்போது இளைஞர்கள் மத்தியில் மதவாத சிந்தனையினை தோற்றுவித்து குழப்பங்களை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் மிக மோசமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக தமிழ்-இஸ்லாமியர்கள் மத்தியில் இவ்வாறான போக்கினை ஏற்படுத்தி இளைஞர்கள் மத்தியில் குழப்பமான நிலைமையினை ஏற்படுத்தவும் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலைமையானது கதிர்காமத்திற்கு பாதயாத்திரை சென்றவர்களுடன் சென்ற நாயை காலால் உதைத்தது தொடக் கம் கல்முனை ஆதார வைத்தியசாலை விவகாரம், அனோஜனின் விவகாரம் ஆகியவற்றினைக்கொண்டு இவ்வாறான குழப்பும் நிலைமையினை ஏற்படுத்துவதற்கு சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர்.

தொடர்ச்சி: பக்கம் 12




இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குத் தங்களது வியர்வையையும் இரத்தத்தையும் சிந்திவரும் மலையக பெருந்தோட்ட மக்கள், சுதந்திரமடைந்து பல தசாப்தங் களைக் கடந்தும் இன்றும் அடிப்படை உரிமைகளுக் காகவும் சமத்துவத்துக்காகவும் ஏங்கும் நிலையே தொடர்கிறது.



இந்நாட்டில் வரவிருக்கும் புதிய அரச வரவு-செல வுத் திட்டம் (Budget) தொடர்பில், தமிழ்ப் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான அநுரகுமார திசாநாயக்கவிடம் முன்வைத்துள்ள கோரிக் கைகள், மலையக மக்களின் தற்போதைய அவல நிலையை ஆழமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன.



இந்த விடயம் தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ள கோரிக்கைகள் மலையகப் பெருந்தோட்ட மக்களின் வாழ்வியலில் தொடர்ந்து நீடிக்கும் கருப்பு பக்கங்கள் வெளிப்படுகின்றன.

அடுத்த நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை அரசாங்கம் பாராளுமன்றில் முன்வைக்க உள்ள நிலையில் பெருந்தோட்ட மக்களுக்கான ஒதுக்கீடுகள் குறித்த எதிர்பார்ப்புகள் தற்போது அதிகரித்துள்ளன.

இதன்படி, பட்ஜெட் என்பது வெறும் வரவு மற்றும் செலவுகளைக் கணக்கிடும் எண்களின் தொகுப்பு மட்டுமல்ல;அது அடுத்த ஒரு வருடத்திற்கான அரசாங்கத்தின் கொள்கை விளக்கமாகவும் இருக்க வேண்டும்.

எனவே அவ்வாறான கொள்கை விளக்கத்தில் மலையக மக்கள் தொடர்பான நிலைப்பாடு தெளிவாக இடம்பெற வேண்டும் என்று மனோ கணேசன் சுட்டிக் காட்டுகிறார்.

மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளைத் தட்டிக் கழிக்காமல், அவர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக இந்த வரவு-செலவுத் திட்டம் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையி லான அரசாங்கத்திடம் தமிழ்ப் முற்போக்குக் கூட்டணி சார்பில் முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கைகள், ஒட்டு மொத்த மலையகச் சமூகத்தினரிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வகையில் மலையக மக்களின் பிரதான வாழ்வாதாரமாக விளங்கும் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை நீண்ட காலமாக இழுபறி நிலையிலேயே நீடிக்கிறது.

கடந்த காலங்களில் அரசாங்கத்தினால் அறிவிக் கப்பட்ட சம்பள உயர்வுகள் எதுவும் தமக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை எனத் தொழிலாளர்கள் தொடர்ந்து குற்றம் சுமத்தி வருகின்றனர்.

கண்டிப்பாக நிதி அமைச்சரினால் பாராளுமன்றத் தில் வரவு செலவு திட்டம் முன்வைக்கப்படும்போது மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் தகவல் முன்வைக்கப்படும்.

எவ்வாறாயினும் குறித்த தொகை சம்பளத்தை வழங்க பெருந்தோட்ட நிறுவனங்கள் பல சந்தர்ப்பங்களில் இணங்குவதில்லை.



இந்நிலையில் பல பெருந்தோட்ட நிறுவனங்கள் குடும்பங்களுக்கு முழுமையான வேலைவாய்ப்பை வழங்குவதாகக் கூறிவிட்டு, சம்பள உயர்வை முறையாகச் சென்றடையச் செய்யாமல் ஏமாற்றுவதாக மனோ கணேசன் குற்றம்சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி சம்பள உயர்வை அறிவிக்கும் போது, “எவ்வளவு தேயிலை கொழுந்து பறித்தால், எவ்வளவு சம்பளம்” வழங்கப்படுகிறது என்ற விபரங்களை வெளிப் படையாக அறிவிக்க வேண்டும் என்றும் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக கடந்த காலத்தில் அரசாங்கத்தின் ஒதுக்கீட்டுடன் அதிகரிக்கப்பட்டுள்ள 1750 ரூபாய் சம்பளம் பல பெருந்தோட்ட பகுதிகளில் வழங்கப்படுகின்றன.

எவ்வாறாயினும் குறித்த தொகை சம்பளத்தை பெறுவதற்கு பறிக்க வேண்டிய கொழுந்தின் அளவு இதுவரையில் அனைத்து பெருந்தோட்ட நிறுவனங்களின் இணக்கப்பாட்டுடன் தீர்மானிக்கப்படவில்லை.

இதன் காரணமாக வழமைக்கு மாறாகவும் அதிக தேயிலை கொழுந்தை பறிக்கும்படி பெருந்தோட்ட தொழிலாளர்கள் பணிக்கப்படுகின்றனர்.

இதுவேளை நாட்டின் பிற பகுதிகளில் உள்ள தொழிலாளர் துறைகளுக்கும் மலையகத் தோட்டத் துறைக்கும் இடையேயான ஊதிய முரண்பாடுகள் களையப் பட வேண்டும் என்று மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

குறைந்தபட்ச நியாயமான சம்பளம் அதற்கான வேலை வரம்பு என்பன சட்டப்பூர்வமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டு தொழிற்சட்டங்களின் கீழ் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

அதேநேரம் பெருந்தோட்ட தொழிலாளர்கள் காணி வீடமைப்பு காணி வசதியுடன் வழங்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறு வழங்கப்படும் வீட்டு திட்டங்களின் எண்ணிக்கையை வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடும் வகையில் செய்து முடிக்க வேண்டும் என்றும் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

மருதன் ராம்

மலையக மக்களின் மிக முக்கியமான மற்றும் தேக்கம டைந்து கிடக்கும் மற்றொரு பிரச்சினை அவர்களது வீட்டுரி மையாகும்.

கடந்த காலங்களில் 7 பேர்சஸ் அல்லது 10 பேர்சஸ் காணிகளுடன் வீடுகள் வழங்கப்பட்டதைச் சுட்டிக்காட்டியுள்ள மனோ கணேசன், இந்த அளவு இம்முறை குறைந்தது 15 பேர்சஸ் ஆக உயர்த்த வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

ஒவ்வொரு முறையும் வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மக்களுக்காக அமைக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் அறிவிக்கப்படுகின்றன எவ்வாறாயினும் ஆண்டின் இறுதியில் நூற்றுக்கணக்கான சில சந்தர்ப்பங்களில் அதனை விடவும் குறைவான வீடுகளே அமைத்து கையளிக்கப்படுகின்றன. இந்த நிலைமை மாற்ற மடைய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.



அதேபோன்று பாராளுமன்றத்தில் ஏற்கனவே கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட தொடர் மாடி திட்டம் எதனையும் மலையக பகுதியில் செயல்படுத்தக் கூடாது என்றும் மனோ கணேசன் கோரியுள்ளார்.

தொடர்ந்து காணி உரிமையை வலியுறுத்தி வரும் மலையக பெருந்தோட்ட மக்களுக்கு தொடர்மாடி குடியிருப்பு வழங்கப்படும் அந்த மக்கள் தொடர்ந்தும் காணி அற்றவர்கள் என்ற நிலைக்கு தள்ளப்படுவர்.



எனவே காணி உரிமையுடன் தனி வீட்டுத்திட்டம் அமைக்கும் போது இந்த நிலை மாற்றமடையும். இவ்வாறு வரவு செலவுத் திட்டம் தொடர்பில் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் அவர் மலையகப் பகுதியில் மறைமுகமாக இடம்பெறும் ரகசிய திட்டம் ஒன்றையும் வெளிப்படுத்தியுள்ளார்.

மலையக பகுதிகளில் தேயிலை பயிரிடப்படாமல் தரிசு நிலங்களாக காணப்படும் காணிகளை இளை ஞர்களுக்கு பகிர்ந்து அளித்து அவர்களின் சுய தொழிலுக்கு உதவ நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் ஆரம்பத்தில் அறிவித்திருந்தது.

தொடர்ச்சி: பக்கம் 12




இந்திய அரசின் தோல்வியுற்ற நிர்வாக அமைப்பைக் கேள்விக்கு உட்படுத்தாமல், அந்தத் தோல்விகளால் பாதிக்கப்பட்ட இளைஞர்களையே நோக்கி, 'தான்தான் ஜனநாயகத்தின் ஒரே பாதுகாவலன்; மக்களின் கடைசி நம்பிக்கை; இறுதிப் புகலிடம்' என்று மார்தட்டிக்கொள்ளும் இந்திய நீதித்துறையின் உச்ச நீதிமன்றம், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களைக் கரப்பான்பூச்சிகள், ஒட்டுண்ணிகள் என்று ஒப்பிட்டு ஆணவத்தோடு எள்ளி நகையாடியதில்தான் இந்தியாவின் Gen Z அத்தியாயம் தொடங்கியது.




சமூகத்தின் சமநிலையற்ற தன்மையால் ஏற்கனவே விரக்தியில் இருந்த இளைஞர்களை, இந்திய உச்ச நீதிமன்றத்தின் இந்த எள்ளி நகையாடல் ஒன்றிணைத்தது. நீட் நுழைவுத் தேர்வின் அநீதிகளை முதன்முறையாகத் தீவிரமாக எதிர்கொண்ட வட இந்திய இளைஞர்கள், 21 க்கும் மேற்பட்ட மாணவர்களின் உயிரிழப்புகளுக்குப் பின்னர் வீதிக்கு வந்தனர். நீட் தேர்வால் உயிரிழந்த மாணவர்களுக்கு நீதி கேட்டனர். இந்த உயிரிழப்புகளுக்குப் பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினர். 'Fair NEET' என்று முழங்கினர்.



புதிய கல்விக் கொள்கையோ, மும்மொழிக் கொள்கையோ, நீட் நுழைவுத் தேர்வோ எதுவாக இருந்தாலும், அவற்றுக்கு எதிரான போராட்டங்களில் தமிழ்நாடுதான் முன்னணியில் நின்று வழிநடத்துகிறது. நீட் எதிர்ப்பிலும் தமிழ்நாடே வழிகாட்டி. தமிழ்நாடு நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று கோரினாலும், வட இந்தியாவின் CJP முன்னெடுத்த இந்தப் போராட்டத்திற்கும் 'Ban NEET' என்ற முழக்கத்துடன் தமிழ்நாடு துணை நின்றது.

CJP முன்னெடுத்த இந்தப் போராட்டம் தலைநகர் டெல்லியையே முடக்கிப்போட்டது. அரச ஒடுக்குமுறையின் உண்மையான முகத்தின் ஒரு பகுதியை இந்தப் புதிய இளைஞர் சமூகம் நேரடியாக எதிர்கொண்டது. போராடிய மாணவர்களையும் இளைஞர்களையும் நோக்கித் துப்பாக்கிகள் நீட்டப்பட்டு அச்சுறுத்தப்பட்டனர். ஜனநாயக உரிமைகளுக்காக வீதிக்கு வந்தவர்களை ஆயுதங்களைக் காட்டி மிரட்டுவதுதான் இந்திய ஜனநாயகத்தின் பதிலாக இருந்தது.

காஷ்மீரின் இதயங்களைத் துளைத்துக்கொண்டிருந்த அகிம்சையே வடிவான இந்திய அதிகாரவர்க்கத்தின் பெல்லட் குண்டுகள், தலைநகர் டெல்லியில் அகிம்சை வழியில் போராடியவர்களையும் பதம் பார்த்தன. கடந்த பத்தாண்டுகளாக மக்கள் போராட்டங்களை ஒடுக்கக் களமிறக்கப்படும் வன்முறைக் கும்பல்களில், தங்களது அடையாளங்களை மறைத்துக்கொண்டு காவிப் பாசிச சக்திகள் பங்கேற்பதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். ஆனால், இப்போது காவல்துறையினரே தங்களது அடையாளங்களை மறைத்து சட்டவிரோத செயல்களுக்கு ஆயத்தமாவதை போல களமிறங்குகிறார்கள்.

36 நாட்களாக நீடித்த இந்த போராட்டத்தின் இறுதியில், மாணவர் இளைஞர்களின் அழுத்தத்திற்குப் பணிந்து அரசு பின்வாங்கியது. மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகினார். இது CJP முன்னெடுத்த போராட்டத்தின் மிகப்பெரிய வெற்றியாகப் பார்க்கப்பட்டது. ஆனால், அந்த வெற்றிக் கொண்டாட்டத்திற்குப் பின்னரும் தமிழ்நாட்டில் நீட் உயிர்பலி தொடர்ந்துக் கொண்டுதான் இருக்கிறது. தர்மேந்திர பிரதானுக்குப் பதிலாக மற்றொரு பாஜக-ஆர்எஸ்எஸ் பின்னணியைக் கொண்ட நபர் நியமிக்கப்பட்டார். இந்தியக் கல்விக் கொள்கையில் அடிப்படை மாற்றம் எதுவும் நிகழவில்லை.



இருந்தபோதிலும், இந்தப் போராட்டம் இந்திய அதிகார வர்க்கத்தை ஆட்டம் காணச் செய்தது என்பதை மறுக்க முடியாது. பிரதமர் நரேந்திர மோடி தனது சுதந்திர தின உரையிலேயே போராட்டக்காரர்களைக் குறிவைத்து 'திமாகி நக்சல்' என்ற புதிய முத்திரையை குத்தினார். இந்த அணுகுமுறை அதிகார வர்க்கத்தின் பதற்றத்தை வெளிப்படுத்துகிறது. மக்களின் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்க முடியாதபோது, அவர்களைப் புதிய பெயர்களால் முத்திரை குத்தி ஒதுக்கிவிடுவது என்கிற உத்தியை இந்திய அரசு பன்னெடுங்காலமாக கடைப்பிடித்து வருகிறது.

இருப்பினும் இந்த போராட்டத்தின் மிகப்பெரிய வெற்றியாக அடுத்த தலைமுறைப் பள்ளி மாணவர்களையும் தங்களது அடிப்படை உரிமைகளுக்காக வீதிக்கு வரச் செய்துள்ளன. ஆசிரியர்கள் வேண்டும்; குடிநீர் வேண்டும்; கழிப்பறை வேண்டும்; பள்ளியில் மின்சாரம் வேண்டும் என்று குழந்தைகள் போராடுகிறார்கள். சுதந்திரம் பெற்று எண்பது ஆண்டுகளை நெருங்கிக்கொண்டிருக்கும், தன்னை வல்லரசாக அறிவித்துக்கொள்ளும் இந்தியாவிடம் மாணவர்கள் கேட்பது என்ன? கல்வி, கழிப்பறை, குடிநீர் போன்ற அடிப்படை உரிமைகள்தான்! இதைவிட இந்தியாவின் வளர்ச்சிக் கூற்றுகளுக்கு வேறு என்ன முரண்பாடு இருக்க முடியும்?

தற்போது தேர்தல் முறைகேடுகள் குறித்த குற்றச்சாட்டுகளை முன்வைத்து, அதற்குப் பொறுப்பேற்று தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி, CJP மற்றும் இடதுசாரி மாணவர் அமைப்புகள் தங்களது போராட்டத்தின் இரண்டாவது அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளன. போராட்டம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தே இந்திய அரசு தனது நிதானத்தை இழக்கத் தொடங்கிவிட்டது. இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் கூட அவசரநிலை அதிகாரபூர்வமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால்,

இளவரசன் அப்பு
சென்னை, தமிழ்நாடு

இன்றைய பாஜக ஆட்சியில், அவசரநிலை என்று அதிகாரபூர்வமாக அறிவிக்காமலேயே, அவசரநிலையை நடைமுறைப்படுத்தி இருக்கிறது இந்திய அரசு.

இந்தப் போராட்டத்தை ஆரம்பத்திலேயே ஒடுக்கிவிட டெல்லி தலைநகரில் 23,000 ராணுவத்தினரும் காவல்துறையினரும் குவிக்கப்பட்டனர். இவர்களுக்கு ஆதரவாகவும் போராடும் மாணவர்களுக்கு எதிராகவும் பல்வேறு வலதுசாரி அமைப்புகளும் சனாதன சக்திகளும் களமிறங்குகின்றன. மாணவர் இளைஞர்களின் இந்த போராட்டத்திற்கு எதிராக அணித்திரளுமாறு வலதுசாரி ஊடகங்களும் அமைப்புகளும் அறைகூவுகின்றன.



ராணுவத்தினரும் காவல்துறையினரும் மாணவர்களை எதிரிநாட்டுப் போர்ப்படையினரைத் தாக்கு வதைப் போலக் கொடூரமாகத் தாக்குகின்றனர். போராட்டத் தலைவர்கள் கைது செய்யப்படுகிறார்கள்; சிறையில் அடைக்கப்படுகிறார்கள்; நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன; வீட்டுக்காவலில் வைக்கப்படுகிறார்கள்; சட்ட விரோதமாகக் கடத்தப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன. இந்த அடக்குமுறையிலிருந்து பத்திரிகையாளர்கள்கூட தப்பவில்லை. மக்களின் குரலை உலகிற்குக் கொண்டுசெல்ல வேண்டிய ஊடகங்களின் சுதந்திரமே அச்சுறுத்தலுக்கு உள்ளாகும்போது, ஜனநாயகத்தின் அடித்தளமே ஆட்டம் கண்டுள்ளது.



உலகிலேயே மிக உயர்ந்த ஜனநாயகக் கட்டமைப்பைக் கொண்ட நாடு என்று இந்தியா தனக்குத்தானே பின்னிக்கொண்ட மாயவலையை, இப்போது அதுவே அறுத்தெறியத் தொடங்கியுள்ளது. தனது உண்மையான முகத்தை மெல்ல மெல்ல வெளிக்காட்டத் தொடங்கியுள்ளது.

தனது புவிசார் பேட்டை ஏகாதிபத்திய அதிகாரத்தை நிறுவும் நோக்கில் சிங்கள பேரினவாதத்துடன் கைக்கோர்த்து தமிழீழ இனவழிப்பில் பங்கேற்ற போதும், தமிழ்நாட்டைத் தவிர்த்த இந்திய மக்களிடம் ஜனநாயகத்தின் பாதுகாவலன் என்ற வேடத்தையே இந்திய அரசு தொடர்ந்து அணிந்துவந்தது. ஆனால், அந்த வேடம் CJP

தொடர்ச்சி: பக்கம் 13




**பாகம் 1**

சவூதி அரேபியா கடுமையான பதிலடி கொடுக்கப் போவதாக எச்சரித்ததோடு, தற்காப்புக்காக வெளிநாட்டு கூட்டாளிகளின் உதவியைப் பெறப்போவதாகவும் உறுதி யளித்திருந்த போதிலும், ஹூதிகள் தொடர்ந்து சவூதி அரேபியா மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.



விமான நிலையங்கள் மற்றும் எண்ணெய் உள்கட்டமைப்புகளைக் குறிவைப்பதன் மூலம், ஏமனில் சவூதி அரேபியா ஈடுபட்டுள்ளதால் ஏற்படும் செலவை அதி கரிக்கவும், அந்த நாட்டின் தலைவர்களை ஒரு தீர்வுக்கான நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்ய வைக்கவும் 'அன் சார் அல்லாஹ்' (ஹூதிகள்) முயல்கிறது.

சமீபத்திய ஹூதி தாக்குதல்கள் சவூதி அரேபியா விற்கு மிகவும் முக்கியமான இடங்களை இலக்காகக் கொண்டுள்ளன. அக்டோபர் 13 அன்று மாலை, தெஹ்ரானில் உள்ள சவூதி ஆராம்கோ நிறுவனத்தின் தலைமையகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது; இது அந்நிறுவனத்தின் முக்கிய நிர்வாகச் செயற்பாடுகள் நடைபெறும் இடமாகும்.

ரியாத்தில் உள்ள ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கிங் காலித் சர்வதேச விமான நிலையம் மீதும் தாங்கள் தாக்குதல் நடத்தியதாக 'அன்சார் அல்லாஹ்' அமைப்பு உரிமை கோரியுள்ளது. இந்த இலக்குகளைத் தேர்ந்தெடுத்ததன் மூலம், சவூதி அரேபியாவின் ஒட்டுமொத்த எண்ணெய் வருவாயையும் ஆபத்துக்குள்ளாக்க ஹூதிகள் விரும்புவதும், அதன் சர்வதேச விமானத் தொடர்புகளைச் சீர்குலைக்க முயல்வதும் தெளிவாகிறது.




நேரடியாகத் தாக்கம் ஏற்படுத்த அந்த இயக்கம் முயற்சிப் பதைக் காட்டுகின்றன. எண்ணெய் உட்கட்டமைப்புகள் அரசாங்கத்திற்கு வருவாயை ஈட்டித் தருகின்றன, விமான நிலையங்கள் நாட்டை வெளி உலகத்துடன் இணைக் கின்றன; எனவே, நாட்டின் மீதான நம்பிக்கை இந்த இரண்டின் பாதுகாப்பைப் பொறுத்தே அமைகிறது. இதனால், சிறிய அளவிலான சேதம் கூட, தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களின் மதிப்பை விட மிக அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

### இந்த மோதலுக்குக் காரணம் என்ன?

ஹூதிகளுக்கும் சவூதி அரேபியாவிற்கும் இடையே நீண்ட கால மோதல் வரலாறு உள்ளது. வட ஏமனில் உருவான இந்த இயக்கம், 2004 முதல் 2010 வரை மத்திய அரசாங்கத்திற்கு எதிராகத் தொடர் போர்களில் ஈடுபட்டது; பின்னர் 2014-ல் தலைநகர் சனாவைக் கைப்பற்றியது. ஏமனின் அரசியல் அமைப்பு, உள்ளூர் மோதல்கள் மற்றும் அரசு நிறுவனங்களின் சரிவு ஆகியவற்றின் பின்னணியிலேயே இந்த இயக்கம் எழுச்சி பெற்றது. ஏற்கனவே வலுவான சமூக அடித்தளத்தையும் அரசியல் நோக்கங்களையும் கொண்டிருந்த இந்த இயக்கத்திற்கு, ஈரானின் ஆதரவு கூடுதல் பலத்தை அளித்தது.

2015-ல் சவூதி அரேபியா மேற்கொண்ட தலை யீடு, அந்த நாட்டின் முதன்மையான வெளிநாட்டு எதிரியாக ஹூதிகளை மாற்றியது. சவூதி அரேபியாவைப் பொறுத்த வரை, தனது தெற்கு எல்லையில் ஒரு விரோத சக்தி அதிகாரத்தைக் குவித்துக்கொள்வதைத் தடுப்பதும், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஏமன் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதுமே இதன் நோக்கமாக இருந்தது. ஹூதி தலைவர்களைப் பொறுத்தவரை, இந்தப் போர் அவர்களின் இருப்புக்கே அச்சுறுத்தலாக மாறிய அதே வேளையில், அவர்களை ஒன்றிணைக்கும் ஒரு முக்கிய காரணியாகவும் மாறியது. வெளிநாட்டு ஆக்கிரமிப்பைக் காரணம் காட்டுவது, உள்நாட்டு மேலாதிக்கத்திற்கான தனது போராட்டத்தை தேசிய இறையாண்மையின் பாதுகாப்பாகச் சித்தரிக்க அந்த இயக்கத்திற்கு உதவியது.



அந்தத் தர்க்கம் தற்போதைய பதற்ற அதிகரிப்பிற் கும் பொருத்தமானதாகவே உள்ளது. யேமன் அரசாங்கப் படைகளின் தாக்குதலுக்கு சவூதி அளிக்கும் ஆதரவு, ஹூதிகளின் பிராந்திய ஆதாயங்களையும் பேரம் பேசும் நிலையையும் அச்சுறுத்துகிறது. இராச்சியத்தின் உட்பகுதி யில் தாக்குதல் நடத்துவது, அந்த ஆதரவிற்கான விலையை உயர்த்த அவர்களுக்கு வழிவகுக்கிறது. போரில் சவூதியின் தொடர்ச்சியான ஈடுபாடு, சவூதி மண்ணில் தொடர்ச்சியான ஒரு விலையை ஏற்படுத்தும்படி செய்வதே அவர்களின் வெளிப்படையான கணக்கீடாக உள்ளது.

அந்த இயக்கத்தின் கோரிக்கைகள் உறுதியானவை: மோதலுக்கு முற்றுப்புள்ளி, அதன் யேமன் எதிரிகளுக்கு வழங்கப்படும் உதவிகளுக்கு வரம்புகள், போக்குவரத்து மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடுகளை நீக்குதல், மற்றும் வருவாய்கள் மற்றும் கொடுப்பனவுகள் குறித்த ஒப்பந்தங்கள். இந்த சமீபத்திய பதற்ற அதிகரிப்பிற்கு நீண்ட காலத்திற்கு முன்பே இந்தப் பிரச்சினைகள் விவாதத்தில் இருந்தன. டிசம்பர் 2023-ல் ஐ.நா.வால் முன்வைக்கப்பட்ட ஒரு செயல் திட்டத்திற்கான கட்டமைப்பில், நாடு தழுவிய போர் நிறுத்தம், பொதுத்துறை ஊழியர்களின் சம்பளத்தை வழங்குதல், எண்ணெய் ஏற்றுமதியை மீண்டும் தொடங்குதல், மற்றும் சனா விமான நிலையம் மற்றும் ஹோடைடா துறைமுகம் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் ஆகியவை அடங்கியிருந்தன.

ரியாத்தின் செலவுகளை அதிகரிப்பதன் மூலம், அன்சார் அல்லாஹ் சலுகைகளைப் பெறவும், அது கைப்பற்றிய பிரதேசத்தின் மீதான கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொள்ளவும் நம்புகிறது. இருப்பினும், அந்த நிபந்தனைகளின் அடிப்படையிலான ஒரு போர் நிறுத்தம், யேமனில் அதிகாரம் எவ்வாறு பகிரப்பட வேண்டும் என்

தமிழில்: **ஆர்தீகன்**

பதைத் தீர்க்காமல், அந்த இயக்கத்தின் நிலையை மேலும் வலுப்படுத்தும்.

சவூதி அரேபியா மீதான தாக்குதல்கள் அன்சார் அல்லாவின் உள்நாட்டு அரசியல் நலன்களுக்கும் உதவு கின்றன. அந்த இயக்கம், தனது ஆதரவாளர்கள் மத்தியில் தனது செல்வாக்கை வலுப்படுத்திக்கொள்ள, இராச்சியத் தின் ஆழமான பகுதிகளுக்குள் தாக்குதல் நடத்தும் தனது திறனைப் பயன்படுத்துகிறது. ரியாத்துடனான மோதல், வெளிநாட்டுத் தலையீட்டிற்கு எதிரான யேமனின் பாதுகாவலர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ளவும், அதி காரத்தைக் கைப்பற்றும் தங்கள் முயற்சியை நியாயப் படுத்தவும் ஹூதிகளுக்கு வழிவகை செய்கிறது.

ஈரானின் இராணுவ மற்றும் தொழில்நுட்ப உதவி, ஹூதிகளின் திறன்களை சந்தேகத்திற்கு இடமின்றி கணிசமாக விரிவுபடுத்தியுள்ளது. ஆனால், தெஹ்ரானுட னான உறவு, யேமனின் அதிகாரப் போராட்டத்திலோ அல்லது சவூதி அரேபியாவுடனான அதன் மோதலிலோ அன்சார் அல்லாவின் சொந்த நலன்களை அழித்துவிடாது. அந்த இயக்கத்தின் நடவடிக்கைகளை ஈரானிய உத்தரவு களை நிறைவேற்றுவதாகக் குறைப்பது, மோதலின் உள் ளூர் வேர்களையோ அல்லது ஹூதி தலைமையின் நோக்கங்களையோ விளக்கத் தவறுகிறது. இதை இன்னும் துல்லியமாக விவரிக்க வேண்டுமானால், சமமற்ற வளங்களைக் கொண்ட ஒரு கூட்டாண்மை என்றும், அதில் யேமன் தரப்பு கணிசமான சுயாட்சியைத் தக்கவைத்துக் கொள்கிறது என்றும் கூறலாம்.



சவூதி அரேபியாவை பலவீனப்படுத்துவது இரு கூட்டாளிகளின் நலன்களுக்கும் உதவக்கூடும், ஆனால் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அவர்களின் விருப்பமான நிபந்தனைகள் வேறுபடலாம். அன்சார் அல்லா, யேமனின் போர்க்களங்களில் நிலவும் நிலைமைகளையும், தனது சொந்த ஆட்சியின் நிலைத்தன்மையையும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே, ஈரானுக்கும் வெளிநாட்டு சக்திகளுக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் ஹூதிகளின் செயல்பாடுகளைத் தானாகவே நிறுத்துவதற்கு உத்தரவாதம் அளிப்பதில்லை.

### போரின் பொருளாதாரம்

உள்நாட்டு ஏவுகணை உற்பத்தியின் வளர்ச்சியும், உதிரிபாகங் களைக் கொள்முதல் செய்வதற்கான விரிவடைந்து வரும் வலையமைப்பும், ஹூதிகளின் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவருவதை ரியாத்துக்குக் கடினமாக்கு கின்றன. அந்த இயக்கம் பல வழிகளில் இருந்து தனது ஆயுதக் கிடங்கை நிரப்பிக் கொள்ள முடிந்தால், ஈரானிய விநியோகங்களைக் கட்டுப்படுத்துவது ஒரு பகுதி விளைவை மட்டுமே ஏற்படுத்தும். எனவே, சவுதி வசதி களைப் பாதுகாக்க தெஹ்ரானுடன் மட்டும் ஒரு ஒப்பந்தம் போதுமானதாக இருக்காது. தொடர்ச்சியான தாக்குதல்கள்

**தொடர்ச்சி: பக்கம் 13**




வேல்ஸில் இருந்து **அருஸ்**

பாரம்பரியமாகவே, அரசியல் சூழலில் நிலவும் நிலையற்ற தன்மை மற்றும் கருத்து வேறுபாடுகள் காரணமாக, இந்தியாவும் இலங்கையும் தங்களுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பின் முழுத் திறனையும் பயன்படுத்திக் கொள்வதில் சவால்களைச் சந்தித்து வந்துள்ளன. இலங்கையின் மதகுருமார்கள் மற்றும் மேல்தட்டு வர்க்கத்தினர், அந்நாட்டைச் சிங்கள அடையாளம் மற்றும் பௌத்த மதத்தின் பாதுகாவலராகக் கருதி வருகின்றனர். இரு நாடுகளுக்கும் இடையே ஆழமான வரலாற்று மற்றும் கலாச்சாரத் தொடர்புகள் உள்ளன; இதில் போர்கள், இந்தியாவின் தமிழ் மன்னராட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புகள், மற்றும் சிங்கள-பௌத்தர் அல்லாத சமூகங்களின் இடம்பெயர்வு மற்றும் குடியேற்றம் போன்றவை அடங்கும். இத்தகைய நிகழ்வுகள், இலங்கையின் அடையாளம் மற்றும் பாதுகாப்பிற்கு இந்தியா ஒரு அச்சுறுத்தல் என்ற எண்ணத்தை அந்நாட்டில் பலப்படுத்தியுள்ளன. என டெல்லியிலிருந்து கொழும்புக்கு ஒரு பாதுகாப்புப் பாலம் என்ற தலைப்பில் Observer Research Foundation என்ற ஊடகம் ஒரு ஆய்வை வெளியிட்டுள்ளது.



இதன் விளைவாக, சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் இலங்கை மேற்கத்திய நாடுகளுடன் நெருக்கமான பாதுகாப்பு உறவுகளை ஏற்படுத்திக் கொண்டது. இலங்கையில் இருந்த தமிழர்களை தனது நலன்களுக்காக இந்தியா பயன்படுத்தியது. அதாவது இலங்கையை மிரட்ட.

இறுதிக்கட்ட ஈழப் போரின்போது, இந்தியா. இலங்கை அரசுக்குத் தேவையான முக்கியமான உளவுத் தகவல்களையும், பிற உபகரணங்களையும் வழங்கிய இந்தியா, விடுதலைப் புலிகளின் விரிவான விநியோகச் சங்கிலிகளை முறியடிக்க உதவியதன் மூலம், அந்த அமைப்பிற்கு எதிரான இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தது.



உள்நாட்டுப் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்த பத்தாண்டுகளில் இலங்கை மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் பாதுகாப்புச் சூழல் மாறியது. இப்பகுதியின் புவிசார் அரசியல் முக்கியத்துவத்தின் காரணமாக, பெரும் வல்லரசுகள் இப்போது துறைமுகங்கள், கடல்வழித் தொடர்புகளுக்காகப் போட்டியிடுகின்றன. கோவிட்-19, ரஷ்யா-உக்ரைன் போர் மற்றும் மத்திய கிழக்கில் நடந்த போர்களால் ஏற்பட்ட விநியோகச் சங்கிலி மற்றும் எரிசக்திப் பாதுகாப்பில் ஏற்பட்ட இடையூறுகளால் அந்த முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.

அதாவது பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையேயான எல்லைகள் மங்கி வருகின்றன, மேலும் கடல்சார் பாதுகாப்பு அதிக முக்கியத்துவம் பெறுகிறது.



இலங்கையின் முதன்மை வர்த்தகப் பங்காளியாக இந்தியா விளங்குகிறது, அதே நேரத்தில் இந்தியாவின் இடமாற்றப்படும் சரக்குகளில் கிட்டத்தட்ட 40 சதவீதத்தை கொழும்புத் துறைமுகம் கையாள்வதாகக் கூறப்படுகிறது. அதே சமயம், கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டா துறைமுகங்கள் உட்பட இலங்கையில் சீனாவின் அதிகரித்து வரும் பாதுகாப்பு ஒத்துழைப்பு, இருப்பு மற்றும் முதலீடுகள், அத்துடன் நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் கண்காணிப்புக் கப்பல்கள் நங்கூரமிடப்படுவது ஆகியவை இந்தியாவிற்குப் பாதுகாப்பு குறித்த கவலைகளை எழுப்பியுள்ளன.

இந்தியா, இலங்கைக்கு மூன்று ஆண்டுகளுக்கு (2025 வரை) 'டோர்னியர்' ரக விமானங்களை குத்தகைக்கு வழங்கியுள்ளது; 6 மில்லியன் அமெரிக்க டாலர் மானியத்தில் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை உருவாக்கியுள்ளது. 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை பயணத்தின் போது, இரு நாடுகளும் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த ஐந்தாண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தம் இந்தியாவின் பிராந்திய பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதுடன், இரு நாடுகளின் நலன்களும் ஒன்றிணைவதையும் பிரதிபலிக்கிறது.



1987-ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்ததும், இலங்கையில் இந்தியாவின் பங்களிப்பு குறித்து நீண்டகாலமாக எச்சரிக்கையுடன் இருந்ததுமான தற்போதைய ஆளும் கட்சி, தற்போது புது தில்லியுடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களுக்கான தடையுத்தரவு 2024 டிசம்பரில் முடிவுக்கு வந்தபோதிலும், இதுவரை சீன ஆய்வுக்கப்பல்கள் எதுவும் இலங்கையில் வந்து நங்கூரமிடவில்லை.

அதேசமயம், இந்திய பாதுகாப்பு அமைச்சரின் சமீபத்திய இந்த வருகையின் விளைவாக மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின மேலும் வான் பாதுகாப்பு துப்பாக்கிக்கான உதிரி பாகங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் போட்டி தீவிரமடைந்து வருவதால், இப்பகுதி எதிர்கொள்ளும் சவால்களும் அச்சுறுத்தல்களும் அதிகரிக்கக்கூடும். இலங்கையின் அரசியல் சூழலும் இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பின் அளவைத் தொடர்ந்து தீர்மானிக்கும் காரணிகளாக இருக்கும். அதேவேளையில், சீன ஆய்வுக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்குள் நுழைவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்குமாறு, சீனாவிடமிருந்து இலங்கை தொடர்ந்து அழுத்தத் திற்கு உள்ளாகி வருகிறது.

மேலும் 21 மில்லியன் டொலர்கள் பெறுமதியான கொழும்பு துறைமுக தெற்காசிய வர்த்தக மற்றும் தளவாட மைய திட்டத்திலிருந்து விலகுவதாக சைனா மெர்ச்சண்ட்ஸ் போர்ட் ஹோல்டிங் கம்பெனி லிமிடெட் இந்த வாரம் அறிவித்துள்ளது. வெளிப்புறச் சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, இத்திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாக அது தெரிவித்துள்ளது.



மேலும், அமெரிக்காவும் ஆஸ்திரேலியாவும் சமீபத்திய ஆண்டுகளில் இலங்கையுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரித்துள்ளதோடு, ராணுவ உபகரணங்களையும் வழங்கி வருகின்றன. புதிய மற்றும் வழக்கத்திற்கு மாறான அச்சுறுத்தல்கள் உருவாகி வரும் சூழலில், தொலைதூர நாடுகளுடனான கூட்டணிகளும் எதிர்காலத்தில் ஏற்பட வாய்ப்புள்ளது. அமெரிக்க பசிபிக் இராணுவத்தின் துணைத் தளபதி, லெப்டினன்ட் ஜெனரல் ஜோயல் "ஜே.பி." வோவெல், கொழும்பு வந்திருந்ததுடன், இலங்கை துறைமுகத்தின் அபவிருத்திக்கு அமெரிக்கா 17 மில்லியன் டொலர்களையும் வழங்கியுள்ளது. அதாவது சீனா வெளியேற அமெரிக்கா உள்நுழைந்துள்ளது.

அதேசமயம், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ, இந்த ஆண்டு இந்தியாவுக்கு மேற்கொள்ளும் தனது இரண்டாவது பயணத்தின் ஒரு பகுதியாக, கடந்த வாரம் மும்பையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கரைச் சந்தித்து, மறுநாள் மேற்கு இந்தியாவில் உள்ள ஒரு முக்கிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைப் பார்வையிட்டுள்ளார். தனது பயணத் திட்டத்தில் புது தில்லியைத் தவிர்த்துவிட்டு, அதற்குப் பதிலாக டீசல் விநியோகம் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களில் கவனம் செலுத்தியுள்ளார். அவர் அதன் கோடீஸ்வர உரிமையாளர் முகேஷ் அம்பானியையும் சந்தித்துள்ளார்.

இந்தியாவில் தனது ஸ்டார்லிங்க் செயற்கைக் கோள் இணையச் சேவையைத் தொடங்குவதில் ஏற்பட்ட தாமதங்களுக்கு இந்திய பில்லியனரான அம்பானியே

**தொடர்ச்சி: பக்கம் 12**

## வெற்று அறிவிப்புகளா? ... தொடர்ச்சி...

எனினும் இதுவரையில் அவ்வாறு எந்த நிலமும் மலையக இளைஞர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படவில்லை.

மாறாக தனியார் நிறுவனங்களுக்கு குறித்த நிலங்களை பகிர்ந்து அளிக்கும் திட்டம் இடம்பெற்று வருவதாக மனோ கனேசன் வெளிப்படுத்தியுள்ளார்.

இதற்கான விலை மனு கோரல்கள் ஏற்கனவே அழைக்கப்பட்டுள்ளதாக மனோ கனேசன் சுட்டிக் காட்டியுள்ளார். மலையக தொழிலாளர்கள் பல சவால்களை எதிர்நோக்கி வரும் சூழலில் அரசாங்கத்தின் இந்த செயற்பாடு மலையக மக்களின் இருப்பையும் கேள்விக்குள்ளாக்குகிறது.

ஒவ்வொரு முறையும் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்போது மலையகப் பகுதிக்குக் கோடிக் கணக்கில் நிதி ஒதுக்கப்படுவதாகவும், பாரிய அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அரசாங்கங்கள் மேடைகளில் முழங்குவது வாடிக்கையாகிவிட்டது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக அறிவிக்கப்படும் திட்டங்களும் நிதி ஒதுக்கீடுகளும் யதார்த்தத்தில் முழுமையாகச் செயல்படுத்தப்படுவதில்லை. இதற்குச் சிறந்த உதாரணம் நுவரெலியா மாவட்டத்தின் பிரதான நகரமான ஹட்டன் நகரின் அபிவிருத்தி விவகாரமாகும்.

கடந்த கால வரவு-செலவுத் திட்டங்களின் போது ஹட்டன் நகரின் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக 500 மில்லியன் ரூபா வரை நிதி ஒதுக்கப்படும் என்று அரசாங்கம் கோலாகலமாக அறிவித்தது.

இதனை வரவேற்று ஹட்டன் நகரில் பாரிய கொண்டாட்டங்களும் இடம்பெற்றன. ஆனால், அந்த அறிவிப்புகள் வெறும் காகித அளவோடு நின்று விட்டனவே தவிர, களத்தில் எந்தவிதமான ஆக்கபூர்வமான செயல்பாடுகளும் முன்னெடுக்கப்பட வில்லை.

சிமெண்ட் பூசுவது, பெயிண்ட் அடிப்பது போன்ற கண் துடைப்பு வேலைகளோடு திட்டங்கள் முடங்கிப் போகின்றனவே தவிர, மக்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் முறையான கட்டமைப்புகள் ஹட்டன் நகரில் இதுவரையில் உருவாக்கப்படவில்லை.

மனோ கனேசன் முன்வைத்துள்ள கோரிக்கைகளின் அடிப்படையில் அரசாங்கம் தனது வரவு-செலவுத் திட்டத்தைச் செயற்படுத்தினால், மலையகச் சமூகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படும்.

வெளிப்படைத்தன்மையுடன் கூடிய சம்பள உயர்வு மற்றும் சட்டப்பூர்வமான குறைந்தபட்ச ஊதியம் கிடைப்பதன் மூலம் தொழிலாளர்களின் வறுமை நிலை நீங்கி, பொருளாதாரப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

நிரந்தர காணி உரிமையுடன் மலையக மக்களுக்கு முழுமையான வீட்டு திட்டம் வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டால் மலையக மக்களின் நீண்டகாலத் தனிவீட்டுக் கனவு நனவாகும்.

கல்வி, சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்புத் துறைகளில் முறையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுவதால், மலையக இளைய தலைமுறையின் எதிர்காலம் ஒளிமயமானதாக மாறும்.

வெற்று அறிவிப்புகளுக்கு விடை கொடுக்கப்பட்டு, வாக்குறுதிகள் யாவும் களத்தில் நடைமுறைப் படுத்தப்படுவதால் மலையக மக்கள் இந்நாட்டின் சம உரிமையுள்ள கௌரவமான குடிமக்களாக மதிக்கப் படுவார்கள்.

வெறும் வரவு-செலவுக் கணக்குகளை எழுதும் சம்பிரதாயமான ஆவணமாக மட்டும் பட்ஜெட் இருக்கக்கூடாது. மாறாக, மலையகத் தமிழ் மக்களின் நூற்றாண்டு காலத் துயரங்களைத் துடைத்தெறிந்து, ஹட்டன் போன்ற நகரங்களின் அபிவிருத்தி வாக்குறுதிகளைக் காகிதத்திலிருந்து களத்திற்குக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கான அரச கொள்கை விளக்கமாக இது அமைய வேண்டும்.

மலையக மக்களின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் உடனடியாகச் செயற்பட வேண்டும் என்பதே மலையக சமூகத்தின் கோரிக்கையாகும்.

• • •

## கிழக்கு மண்ணில் ... தொடர்ச்சி...

கிழக்கு மாகாணம் என்பது தமிழர், முஸ்லிம்கள் இணைந்து வாழும் ஒரு பிராந்தியமாகும். ஆயினும், போருக்குப் பின்னரான சூழலில், கிழக்கின் தமிழ்-முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு நுட்பமான இனவாத மற்றும் பிளவுவாதச் செயற்பாடுகள், அப்பிராந்தியத்தின் சமூகக் கட்டமைப்பையும் தமிழ் தேசிய அமைப்பையும் கடுமையாகப் பாதித்து வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் இளைஞர்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் முதன்மையான இனவாத உத்தியாகப் பிராந்தியவாதப் பிளவுறுத்தல் அமைகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களிடையே உள்ள அரசியல் மற்றும் வரலாற்று ரீதியான பிணைப்பைச் சிதைக்கும் நோக்கில், "வடக்கு மேலாதிக்கம்" மற்றும் "கிழக்கு புறக்கணிப்பு" என்ற கருத்துருவாக்கம் இளைஞர்கள் மத்தியில் தொடர்ச்சியாக விதைக்கப்படுகின்றது. இதன் மூலம், கூட்டுத் தமிழ் தேசிய சிந்தனையிலிருந்து கிழக்கு இளைஞர்களைப் பிரித்து, அவர்களின் அரசியல் வீரியத்தைக் குறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

அடுத்து, சிறுபான்மை சமூகங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தூண்டுதல் மற்றொரு பிரதான செயற்பாடாக உள்ளது. கிழக்கில் பல தசாப்தங்க ளாக இணைந்து வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களிடையே நில உரிமை, எல்லைப் பிரச்சினைகள், வர்த்தகப் போட்டிகள் மற்றும் வர்த்தக மைய ஆதிக்கம் போன்றவற்றை முதன்மைப்படுத்தி, தமிழ் இளைஞர்கள் மத்தியில் மத மற்றும் இன ரீதியான வெறுப்புணர்வைத் தூண்டும் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சமூக வலைத்தளங்கள் வாயிலாகப் பொய்ப் பிரச்சாரங்களைப் பரப்புவதன் மூலம் இளைஞர்களின் உணர்ச்சிகள் தூண்டப்பட்டு, அவர்களை உண்மையான உரிமைப் போராட்டங்களில் இருந்து திசைதிருப்பி, பக்கத்து சமூகங்களுடனான மோதல்களுக்குள் தள்ளும் சூழல் உருவாக்கப்படுகின்றது.

மேலும், தமிழ் இளைஞர்களின் சிந்தனைத் திறனை மழுங்கடிக்கும் வகையில் திட்டமிட்ட போதைப்பொருள் பரவல் மற்றும் சட்டவிரோதக் குழுக்களின் ஊக்குவிப்பு போன்ற செயற்பாடுகளும் இனவாத இலக்குகளை அடைவதற்கான கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. உரிமைகளுக்காகக் குரல்கொடுக்க வேண்டிய இளைஞர் சக்தியைப் போதைக்கும், உள்ளூர் குழு மோதல்களுக்கும் அடிமையாக்குவதன் மூலம், அவர்களைத் தங்களின் வரலாற்று நிலங்கள் மற்றும் தொல்லியல் அடையாளங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயல்பட முடியாதவாறு முடக்கும் தந்திரோபாயங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

கிழக்கில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் விதைக்கப்படும் இனவாதமும் பிளவுவாதமும் தற்செயலான நிகழ்வுகள் அல்ல மாறாக, அவை தமிழ் தேசியப் போராட்டத்தின் பலத்தையும், கிழக்கு மண்ணில் தமிழர்களின் இருப்பையும் பலவீனப்படுத்தும் திட்டமிட்ட நகர்வுகளாகும். இத்தகைய ஆபத்தான சூழலை உணர்ந்து, கிழக்கு இளைஞர்கள் உணர்ச்சிவசப்படாமல், வரலாற்று விழிப்புணர்வோடும், பக்கத்து சமூகங்களுடன் சகிப்புத்தன்மையோடும், தங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தெளிவான அரசியல் பாதையில் பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.அதேபோன்று எமது இளைஞர்கள் போராடி தங்களை ஆகுதியாக்கி உருவாக்கிய பண்பாட்டு விழுமியங்களை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கொண்டுசெல்வதும் எமது கடமை என்பதை உணர்ந்துசெயற்படவேண்டும்.

• • •

## சிந்திக்காத இனவாதப்... தொடர்ச்சி...

தொடர்பாக அறிவித்தல் வழங்கப்பட்டது.

14. 2016இல் இடம்பெற்ற குரகல பேச்சு தொடர்பான வழக்கில் 2024 மார்ச் 28 அன்று கொழும்பு மேல் நீதிமன்றம் இவருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் ரூ. 100,000 அபராதமும் விதித்தது. பின்னர் 2024 ஜூலை 18 அன்று மேல்முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கியதை அடுத்து, 2024 ஜூலை 22 அன்று விடுவிக்கப்பட்டார்.

15. பம்பலப்பிட்டி ரூ. 100 மில்லியன் மதிப்புள்ள வீடு தொடர்பான வழக்கில் 2024 செப்டெம்பர் 12 அன்று சொத்தை ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது.

16. 2016 கிருளப்பனை உரை தொடர்பாக 2025 ஜனவரி 9 அன்று கொழும்பு நீதவான் நீதிமன்றம் 9 மாதச் சிறைத் தண்டனையும் ரூ. 1,500 அபராதமும் விதித்தது. 2026 ஜூன் 1 அன்று மேல் நீதிமன்றத்தில் சொத்தை வாரிசுகளிடம் ஒப்படைப்பதாகப் பாதுகாப்புத் தரப்பு தெரிவித்தது.

17. 2026 ஜூன் 23 அன்று 9 மாதச் சிறைத்தண்டனையை எதிர்த்த மேல்முறையீட்டைக் கொழும்பு மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்து தண்டனையை உறுதிப்படுத்தியது.

18. 2026 செப்டெம்பர் 10 அன்று, மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் சந்தியா எக்னெலிகொட ஆகியோர் தொடர்ந்த வழக்கில், 2019இல் வழங்கப்பட்ட ஜனாதிபதிப் பொதுமன்னிப்பு செல்லாது மற்றும் சட்டவிரோதமானது என உயர் நீதிமன்ற நீதிபதி ஜனக் டி சில்வா தீர்ப்பளித்தார்.

19. 2026 செப்டெம்பர் 12 அன்று நாவல வீதி விகாரைக்குச் சென்ற சிறைத்துறை அதிகாரிகளிடம் இவர் சிக்கவில்லை. இந்நிலையில், 2026 செப்டெம்பர் 16 அன்று நீதிமன்றத்தில் முன்னிலையான நிலையில் வழக்கு செப்டெம்பர் 30க்கு ஒத்திவைக்கப்பட்டது.

20. 2026 செப்டெம்பர் 29 அன்று அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் மேல்முறையீட்டு நீதிமன்றமும், செப்டெம்பர் 30 அன்று மேல் நீதிமன்றமும் பிடியாணை பிறப்பித்தன.

இந்தச் சம்பவங்களில், கடந்த 2026 அக்டோபர் 1ஆம் திகதி அன்று திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, 2026 அக்டோபர் 3ஆம் திகதி இரவு களுத்துறை தினியாவல (லெனகிரி) வன அரணியத்தில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறான குற்றச்செயல்களைச் செய்த பிக்கு ஒருவரை விடுதலை செய்யுமாறு காவி உடை போர்த்த பிக்குகள் போராடுகிறார்கள் என்றால், பிக்குகள் என்ன குற்றம் செய்தாலும் தண்டிக்கக் கூடாது, நீதி விசாரணை செய்யக்கூடாது, ஆடைகளைக் களையக்கூடாது, சிறையில் அடைக்கக்கூடாது, பிக்குகள் அயோக்கியர்களாக இருந்தாலும் தண்டிக்க அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதுதானா?

இதுதான் இலங்கையில் எழுதப்படாத இனவாத பௌத்தக் கொள்கை. இந்த நிலை, பௌத்த மதத்தை வணங்கிக்கொண்டு புத்தரின் போதனைகளை உதாசீனம் செய்துகொண்டு, சண்டித்தனத்தால் பிக்குகள் எதைச் செய்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலையே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட பல இனவாத அரசியல்வாதிகளின் கொள்கை.

பௌத்த மதத்தின் கொள்கையையும் புத்த பெருமானின் போதனைகளையும் உதாசீனம் செய்யும் இனவாத பௌத்த பிக்குகள் உள்ளவரை ஸ்ரீலங்கா நாடு சீரழியும் என்பதே உண்மை.

• • •

## இலங்கையில் மையங்கொள்ள ... தொடர்ச்சி...

காரணம் என்று எலான் மஸ்க் பகிரங்கமாகக் கூறியதையடுத்து, ரூபியோ அம்பானியைச் சந்திக்கின்றார். புது தில்லிக்குப் பதிலாக மும்பையில் பேச்சுவார்த்தை நடத்த ரூபியோ எடுத்த முடிவு, இந்தியாவின் எதிர்க்கட்சியான காங்கிரஸிடமிருந்து விமர்சனத்தைப் பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, ரூபியோ "தனது ஊழியரை மும்பைக்கு வரவழைத்தார்" என்று கிண்டலாகக் கூறினார். அதே நேரத்தில், மூத்த காங்கிரஸ் தலைவர் ஜெய்ராம் ரமேஷ், அமெரிக்கத் தூதர் ஏன் ஜெய்சங்கரின் நிகழ்ச்சி நிரல் விவரங்களை அறிவித்தார் என்று கேள்வி எழுப்பினார்.

அமெரிக்காவில், ஆறு ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், புது தில்லியில் அரசுக்கு எதிரான போராட்டக்காரர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது மற்றும் அதிகப்படியான பலம் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படு வது குறித்து கவலைகளை எழுப்புமாறு ரூபியோவை வலியுறுத்தினர். அமெரிக்காவில் உள்ள போராட்டக்காரர்களை இந்தியத் தூதரகங்கள் கண்காணித்ததாக வந்த அறிக்கைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர்களின் அக்டோபர் 16 கடிதம் கோரியது.

ஆனால் தலைநகருக்கு வெளியே வெளிநாட்டுப் பிரமுகர்களுடனான சந்திப்புகள் அசாதாரணமானவை அல்ல என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் சுட்டிக்காட்டியது.

அதேசமயம், புது தில்லியில் சர்ச்சைக்குரிய வாக்காளர் பட்டியல்களுக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்றுவரும் நிலையில், பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமின் அல்காரிதம்கள் சில குறிப்பிட்ட கருத்துக்களை ஒருதலைப்பட்சமாக ஊக்குவிப்பதாகக் கவலைகள் எழுந்துள்ளதைச் சுட்டிக்காட்டி, அவை உள்ளடக்கங்களைப் பரிந்துரைக்கும் விதத்தை மறுபரிசீலனை செய்யுமாறு மெட்டா நிறுவனத்தை இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

அதாவது இந்தியா மீதான பொருளாதார அழுத்தங்கள் காரணமாக இந்திய பங்கு சந்தைகளின் வீழ்ச்சி மற்றும் நாணயத்தின் சரிவு என்பன இந்தியா அமெரிக்காவின் நகர்வுகளை எதிர்க்க முடியாத நிலைக்கு கொண்டு வந்துள்ளது. தற்போது இந்தியாவில் நடக்கும் போராட்டங்களை மறைமுகமாக ஆதரிக்கும் அமெரிக்கா தனது மெட்டா நிறுவனத்தின் ஊடாக இந்திய அரசியலிலும் நுழைந்துள்ளது.

அதாவது இந்தியாவையும் சீனாவையும் ஓரங்கட்டி விட்டு இலங்கைக்குள் வலுவாக கால்பதிக்கப் போகின்றது. அமெரிக்கா, அடுத்த மத்திய கிழக்கு போர் முனையாக இந்து சமுத்திரப் பிராந்தியம் மாறுவதற்கு இலங்கை மையப்புள்ளியாகும்.

• • •

## காலில் விழ மறுத்த... தொடர்ச்சி...

நிகழ்வுகளும் குழந்தையின் கண்ணியத்தையும் உரிமையையும் தெளிவாக எடுத்துரைத்த வரலாற்று நிகழ்வுகளாகும்.

தமிழர் தாயகத்தில் குழந்தைகள் தமது உரிமைகளைக் கேட்பதற்கும், தமது வரலாற்றை வெளிப்படுத்துவதற்கும், நீதிக்காகக் குரல் கொடுப்பதற்கும் துணிகிறார்கள். செம்மணியில் புதைக்கப்பட்ட குழந்தைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் நிலை வெளிப்படுத்தப்பட வேண்டும். போரில் கொல்லப்பட்ட குழந்தைகளின் மரணங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்று தமது மனக்கிடக்கைகளை வெளிப்படுத்துகிறார்கள். உண்மையில் உலகில் குழந்தைகள் நீதிக்கும் உரிமைக்கும் சுயகௌரவத்திற்கும் போராடுகிற போராட்டம் என்பது உன்னதமானது. அதுவே ஈழத்தில் நிகழ்கிறது என்பதற்கு இவ்விரு நிகழ்வுகளும் சாட்சிகளாகும்.

• • •

## செம்மணி குறித்த ... தொடர்ச்சி...

வேண்டும். இதற்காகப் பொருத்தமான மயானப் பதிவுகள், நிலப் பயன்பாட்டின் வரலாறு, பொருந்தக்கூடிய சட்ட ஏற்பாடுகள் மற்றும் ஏனைய நம்பகமான சான்றுகள் ஆராயப்பட வேண்டும். எச்சங்களின் ஆழம், பரவல், மண் அடுக்குகளில் அவற்றின் அமைவிடம் மற்றும் அவற்றின் நிலை ஆகியவை தடயவியல் மற்றும் தொல்லியல் ஆய்வுகளில் முக்கியமான அம்சங்களாகும்.

இந்த அம்சங்கள் வழக்கமான அடக்கம் என்று முன்வைக்கப்பட்ட விளக்கத்துடன் பொருந்துகின்றனவா என்பதை அறிக்கை விளக்க வேண்டும்.

மேலும், முடிவுகளுக்கு வருவதற்குப் பயன்படுத்தப்பட்ட அறிவியல் அவதானிப்புகளையும் ஒப்பீட்டுச் சான்றுகளையும் அடையாளப்படுத்த வேண்டும் என்று நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நகர்த்தல் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய கிழக்கின்... தொடர்ச்சி...

“எரிசக்தி உற்பத்தி மற்றும் வர்த்தகப் பாதைகளில் மேலும் தடைகள் ஏற்படுவது மிகப்பெரிய அபாயமாக உள்ளது. இது எரிசக்தி விலைகளை மேலும் அதிகரிக்கச் செய்யலாம்” என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொடரும் மயிலிட்டி ... தொடர்ச்சி...

குறிப்பாக வாரங்கள் கடந்து, மாதங்கள், வருடங்கள் என உருண்டோடும் நிலையிலும் தமது கோரிக்கைக்கு உரிய தீர்வு கிடைக்காமை மக்களிடையே பெரும் ஏமாற்றத்தையும் ஆதங்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேநேரம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கமும், அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமக்கு வழங்கிய வாக்குறுதிகள் நடைமுறையில் நிறைவேற்றப்படவில்லை என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

## தனியுரிமை சர்ச்சையில் ... தொடர்ச்சி...

மில்லியன் ஃபேஸ்புக் பயனர்களிடமிருந்து அவர்களின் அனுமதியின்றி தனிப்பட்ட தகவல்களைப் பெற்றது அம்பலமானது.

பயனர்களின் நண்பர்களின் தரவுகளை அணுகுவதற்கான ஃபேஸ்புக்கின் அமைப்பைத் தவறாகப் பயன்படுத்திய ஒரு மூன்றாம் தரப்பு ஆளுமை வினாடி வினா செயலி மூலம் இந்தத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. கேம்பிரிட்ஜ் அனலிடிகா இந்தத் தகவல்களைப் பயன்படுத்தி, வாக்காளர்களின் உளவியல் சுயவிவரங்களை உருவாக்கி, 2016 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் உட்பட, இலக்கு வைக்கப்பட்ட அரசியல் விளம்பரங்களை வழங்கியது.

## மத்திய கிழக்கிலுள்ள... தொடர்ச்சி...

பகுதி மக்களை “மனிதக் கேடயங்களாக” வொஷிங்டன் பயன்படுத்துவதாக தெஹ்ரான் குற்றம் சாட்டியது.

அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவின் செய்தித் தொடர்பாளர் டிமோதி ஹாக்கின்ஸ், படைகளின் நகர்வுகள் குறித்த செய்திகள் பற்றி விவாதிக்க மறுத்துவிட்டார். மேலும், “பணித் தயார்நிலையை மேம்படுத்துவதற்காக” அமெரிக்கப் படைகள் தொடர்ந்து இடமாற்றம் செய்யப்படுவதாகவும், அமெரிக்கப் பணியாளர்கள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஏமனின் ஹூதி இயக்கம், பொதுமக்கள் விமான நிலையங்கள் மற்றும் பிற முக்கிய உள்கட்டமைப்புகள் மீது அதிகரித்து வரும் தாக்குதல்களைக் காரணம் காட்டி, அத்தியாவசியமற்ற பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் சவூதி அரேபியாவை விட்டு வெளியேறுமாறு அமெரிக்க வெளியுறவுத் துறை உத்தரவிட்டுள்ளது.

வளைகுடா முழுவதும் கூடுதல் தூதரகப் படைகளைத் திரும்பப் பெறுவதற்கு வொஷிங்டன் தயாராகி வருவதாக அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. ஆனால், மேலும் படைகள் திரும்பப் பெறப்படுவது குறித்த செய்திகள் “தவறானவை” என்று வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் டாமி பிக்காட் விவரித்தார்.

ஈரானுக்கு எதிரான தாக்குதல்களை மீண்டும் தொடங்குவதற்கான வழிகளை மூத்த அமெரிக்க இராணுவ அதிகாரிகள் ட்ரம்பிடம் முன்வைத்துள்ளதாக வரும் செய்திகளுக்கு மத்தியில் இந்த நிகழ்வுகள் நடந்துள்ளன. என்பிசி-யின்படி, இந்தத் திட்டங்களில் ஈரானிய அணுசக்தி நிலையங்கள், நிலத்தடி அமைப்புகள் மற்றும் முக்கிய எண்ணெய் ஏற்றுமதி மையமான கார்க் தீவு, ஹோர்முஸ் ஜலசந்தியில் உள்ள கெஷ்ம் உள்ளிட்ட மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த தீவுகள் மீதான தாக்குதல்கள் அடங்கும்.

## கொழும்புத் துறைமுகத்தை ... தொடர்ச்சி...

இருப்பினும், நடைமுறை ரீதியாக பல தடைகள் நிலவுகின்றன. பல தசாப்தங்களாக டொலர் வர்த்தகத்திற்கே பழகிப்போன இலங்கை வர்த்தகர்கள் மத்தியில் யுவானின் பயன்பாடு குறித்த தயக்கம் உள்ளது.

யுவானில் ஈட்டப்படும் வருவாயைக் கொண்டு சீனாவிலிருந்து மட்டுமே இறக்குமதி செய்ய முடியும் என்பதால், உலகளாவிய ரீதியில் யுவானை சுதந்திரமாகப் பயன்படுத்த முடியாது.

மேலும், சந்தை விதிகளுக்கு உட்பட்டு இயங்கும் டொலரைப் போலன்றி, சீன மத்திய வங்கியின் கடுமையான கொள்கைக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட யுவானின் மதிப்பு மாறுபாடுகள் குறித்தும் வர்த்தகர்கள் அச்சம் கொள்கின்றனர். இவ்வாறான நிலையில், கொழும்புத் துறைமுகத்தை மையமாகக் கொண்டு அரங்கேறும் இந்த நிகழ்வுகள், இலங்கை உலகளாவிய வல்லரசுகளின் புவிசார் வர்த்தகப் போட்டியில் எந்தளவுக்குச் சிக்கியுள்ளது என்பதைப் புலப்படுத்துகின்றன. ஒருபுறம் சீன முதலீடுகளின் வெளியேற்றமும் இழப்பீட்டு அழுத்தங்களும் நாட்டின் பொருளாதாரத்தை அச்சுறுத்தும் வேளையில், மறுபுறம் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் மூலோபாய நகர்வுகள் இலங்கையின் வெளியுறவுக் சமநிலையைச் பரிசோதிக்கின்றன.

சீனா, அமெரிக்கா, இந்தியா ஆகிய முத்தரப்பு வல்லரசுகளின் நலன்களையும் திறம்படக் கையாண்டு, நாட்டின் இறையாண்மைக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நடுநிலையான, சாணக்கியமிக்க இராஜதந்திரக் கொள்கையைப் பேணுவதே அநுர அரசாங்கத்தின் முன்னுள்ள முதன்மைச் சவாலாகும்.

## சவூதி அரேபியாவின் ... தொடர்ச்சி...

தங்கள் நலன்களுக்கு உகந்தவை என்று ஹூதிகளே நம்புகிறார்களா என்பதைப் பொறுத்தே பல விஷயங்கள் அமையும்.

மேலும், ஹூதிகள் தங்கள் ஆயுதங்களின் எண்ணிக்கையிலோ அல்லது தரத்திலோ சவுதி அரேபியாவுக்கு இணையாக இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. அவர்கள் தங்கள் இலக்குகளைத் தேர்ந்தெடுத்து, தாக்குதல்களுக்கு இடையில் இடைநிறுத்தம் செய்ய முடியும், ஆனால் சவுதி அரேபியாவோ ஒரு பரந்த நிலப்பரப்பில் உள்ள விமான நிலையங்கள், எண்ணெய் வசதிகள் மற்றும் நகரங்களைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும். ஒரே ஒரு தாக்குதல் கூட ஒரு வசதியின் செயல்பாடுகளை சீர்குலைக்கலாம், விமானப் பயணங்களை ரத்து செய்யத் தூண்டலாம் அல்லது வணிக நடவடிக்கைகளை முடக்கலாம். அமெரிக்க வான் பாதுகாப்பு அமைப்புகளை வாங்குவது அந்த அச்சுறுத்தலைக் குறைக்கிறது, ஆனால் அதை முற்றிலுமாக நீக்குவதில்லை. ரியாத்தின் பிரச்சினை என்னவென்றால், அதன் இராணுவ மேலாதிக்கம் இன்னும் தனது எதிரிக்கு பொருளாதார ரீதியாக வலிமிகுந்த அடிகளை வழங்கும் திறனைப் பறிக்கவில்லை என்பதே. துல்லியமாக இந்தத் திறனைத்தான் ஹூதிகள் பேச்சுவார்த்தைக்கான ஒரு பேரம் பேசும் சக்தியாக மாற்ற முயற்சிக்கின்றனர்.

**நன்றி: ரஸ்யா ருடே**

**தொடரும்...**

## மேய்ச்சல் நில பிரச்சினை ... தொடர்ச்சி...

பிரதேசத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கில், மயிலத்தமடு பகுதியிலுள்ள காவல் துறை காவல் அரணில் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், விசேட காவல்துறை அதிகாரி யொருவரும் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்

## அரச செலவினங்களைக் ... தொடர்ச்சி...

அவற்றை வழங்குவது செலவுகளைக் குறைப்பதற்கு உகந்ததாக அமையுமா என்பதை மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொதுத்துறைக்கான ஆட்சேர்ப்புச் செயற்பாடுகளைச் சீரமைப்பதுடன், அரச நிர்வாகத்தின் செயற்றிறனையும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

தற்போதுள்ள கட்டமைப்பு ரீதியான சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலுடன், பொதுநிதி திறம்படப் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், பொதுச் சேவையைத் தொழில்முறைத் தன்மையும் ஈர்ப்பும் கொண்ட துறையாக மாற்றியமைப்பதே அரசாங்கத்தின் பரந்த நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

## இந்திய ஜனநாயகத்தின் ... தொடர்ச்சி...

தலைமையிலான இந்த போராட்டத்தின் வாயிலாகக் களையத் தொடங்கியுள்ளது.

இத்தகைய சூழலில், மக்களின் இறுதி நம்பிக்கை என்று மார்தட்டிக்கொள்ளும் நீதிப் பரிபாலன அமைப்பு என்ன செய்கிறது? மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதையும், போராட்டக்காரர்கள் ஒடுக்கப்படுவதையும் வேடிக்கை பார்ப்பதோடு மட்டுமல்லாமல், அரசின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்குத் துணைபோகிறதா என்ற கேள்வியும் எழுகிறது. அரசியலமைப்பையும் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய அமைப்புகள், அதிகாரத்தின் அத்துமீறல்களுக்கு எதிராகச் செயல்படத் தவறினால், சாதாரண மக்கள் நீதியை எங்கே தேடுவது?

உலக அரங்கில் இந்திய அதிகார வர்க்கம் சூடிக்கொள்ளும் ஜனநாயக அடையாளத்தை உண்மையில் நடைமுறைப்படுத்த இந்தப் புதிய தலைமுறை மாணவர்களும் இளைஞர்களும் போராடுகிறார்கள். அவர்கள் கேட்பது சலுகைகளையோ அதிகாரத்தையோ அல்ல; இந்திய அரசியலமைப்பு உறுதியளித்த உரிமைகளை தான் கேட்கிறார்கள்.

CJP போராட்டமும் புதிய தலைமுறையின் எழுச்சியும் இந்திய அதிகார வர்க்கத்திற்குச் சொல்லும் செய்தி ஒன்றுதான்: மக்களின் தன்னெழுச்சியை நிரந்தரமாக ஒடுக்கிவிட முடியாது. ஒவ்வொரு அடக்குமுறையும் புதிய எதிர்ப்பை உருவாக்கும்; ஒவ்வொரு அச்சுறுத்தலும் புதிய கேள்விகளைப் பிறப்பிக்கும். ஜனநாயகம் என்பது ஆட்சியாளர்கள் மக்களுக்கு வழங்கும் சலுகையல்ல; மக்கள் போராடிப் பெற்ற உரிமை. அந்த உரிமையைப் பாதுகாப்பதற்கான போராட்டம் தொடரும் வரை, அதிகாரத்தின் முகமூடியைக் கிழிக்கும் புதிய தலைமுறையின் எழுச்சியும் தொடரும்!

## உலகளாவிய கடன் ... தொடர்ச்சி...

டிரில்லியன் டொலர்) அல்லது தூய்மையான எரிசக்தி (2.3 டிரில்லியன் டொலர்) ஆகியவற்றிற்காகச் செலவிடப்படும் தொகையை விட அதிகம்.

பொதுமக்களைப் பொறுத்தவரை, வட்டிச் செலவுகள் அதிகரிப்பது என்பது பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் போன்ற சேவைகளுக்குக் கிடைக்கும் நிதி குறைவதைக் குறிக்கிறது. இந்தச் செலவுகளை ஈடுகட்ட அரசாங்கங்கள் வரிகளை உயர்த்த வேண்டியிருக்கலாம் அல்லது பொதுச் செலவுக ளைக் குறைக்க வேண்டியிருக்கலாம். மேலும், அரசாங்கங்களுக்கான கடன் வாங்கும் செலவு அதிகரிப்பது, வீட்டுக் கடன்கள், வாகனக் கடன்கள் மற்றும் கிரெடிட் கார்டுகளுக்கான வட்டி விகிதங்களையும் உயர்த்தக்கூடும்.

அமெரிக்கா, 41.4 டிரில்லியன் டொலர் என்ற மிகப்பெரிய அரசுக்கடனைப் கொண்டுள்ளது; இது அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 127 சதவீதமாகும். அமெரிக்கா தனது கடனை டொலரில்—உலகளாவிய முதன்மை இருப்பு நாணயத்தில்—பெறுவதால், அதன் கடன் பத்திரங்களுக்கு உலகளவில் அதிக தேவை உள்ளது. இருப்பினும், அமெரிக்காவின் கடன் வாங்கும் திறன் எல்லையற்றது அல்ல.

## செம்மணி விவகாரம்... தொடர்ச்சி...

இதுவரை கண்டெடுக்கப்பட்ட உடல்களில் பெரும்பான்மையானவை உடம்புகள் இன்றிப் புதைக்கப்பட்டுள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்ட நிலையில், தற்போது இயற்கை அழுத்தம் காரணமாக உடைகள் மற்றும் உடல்கள் கரைந்து போயிருக்கலாம் என புது விளக்கம் அளிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச நிபுணர்கள், செம்மணி விசாரணைக்கு போதிய நிதியும், தடயவியல் மற்றும் உடற்கூற்றியல் தொழில்நுட்ப வசதிகளும் இல்லை என்றும், சர்வதேச உதவிகள் அவசியமென்றும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

செம்மணி விசாரணைகளை சர்வதேசப் பொறுப்புடன் முழுமையாக நடத்த அரசாங்கம் தயங்குவதாகவும், குற்றங்களைச் செய்துவிட்டு அதனை மூடிமறைக்க முற்படும் முந்தைய அரசாங்கங்களை விட இந்த அரசாங்கம் வேறுபட்டதல்ல என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், செம்மணி விவகாரத்தில் பாதிக்கப்பட்ட மக்களும், நீதி கோருவோரும் இந்த அரசாங்கத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை முழுமையாக இழந்துவிட்டதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .







# சூரியன்

தினமும் வருகிறாய்,
யாரும் வரவேற்காவிட்டாலும்.
எரிந்து கொண்டே ஒளி தருகிறாய்,
யாரும் நன்றி சொல்லாவிட்டாலும்.

உன்னை பார்க்க முடியாது என்று
தெரியும்,
இருந்தும் உன்னைத்தான்
தேடுகிறேன் இருட்டில்.

நீ மறைவதில்லை,
நாங்கள் தான்
திரும்பிக்கொள்கிறோம்.
காலையில் நீ சிரிக்கிறாய்,
மாலையில் நீ சிவக்கிறாய்.
உன் வெளிச்சம் இல்லாமல்,
எந்த நிழலுக்கும் அர்த்தமில்லை.
நீ இருப்பதால் தான், நான்
இருப்பது தெரிகிறது....

பி.ஹர்சினி
பாலையூற்று

# மறதியை நோக்கி நகரும் மனிதம்: செயற்கை நுண்ணறிவை நம்பும் தலைமுறை




இன்று எதற்கெடுத்தாலும் செயற்கை நுண்ணறிவு தான். வீட்டுப்பாடம் செய்ய, படம் திருத்த, கேள்வி கேட்க என எல்லாவற்றிற்கும் அதையே நம்புகிறோம். நம் மூளைக்கு வேலை கொடுக்காமல், எல்லாவற்றையும் அதையே செய்ய சொல்கிறோம். இதனால் மனிதனின் சிந்திக்கும் திறன் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது.

இதில் நன்மைகளும் இருக்கின்றன. இதன் மூலம் வேலைகள் மிக வேகமாக முடிகின்றன, மருத்துவம், விவசாயம், கல்வி என அனைத்து துறைகளிலும் பெரிய வளர்ச்சி வந்துள்ளது. கடினமான கணக்குகளை கூட நொடியில் முடித்து விடுகிறது, மனிதர்களால் செய்ய முடியாத பல வேலைகளை செய்கிறது. நேரம் மிச்சமாகிறது.

ஆனால் தீமைகள் தான் பயமுறுத்துகின்றன. எதையும் நாமே யோசிக்காமல் அதையே நம்புவதால், நம் நினைவாற்றல் குறைகிறது, சொந்தமாக ஒரு கட்டுரை கூட எழுத முடியாத நிலை வருகிறது. சிறு பிள்ளைகள் கூட சிந்திக்காமல் அப்படியே எடுத்து எழுதுகிறார்கள். இதனால் புதிதாக உருவாக்கும் திறன் அழிகிறது. மேலும் பலரின் வேலை வாய்ப்புகள் பறிபோகும் ஆபத்தும் இருக்கிறது, தவறான தகவல்களை அது உண்மை போல் சொல்லும் போது அதையும் நம்பி ஏமாறுகிறோம்.

இதை சரியாக பயன்படுத்த வேண்டும் என்றால், செயற்கை நுண்ணறிவை நம் வேலைக்காரனாக வைத்துக் கொள்ள வேண்டும், தலைவனாக அல்ல. தகவலுக்கு அதை பயன்படுத்தலாம், ஆனால் முடிவை நாம் தான் எடுக்க வேண்டும். தினமும் கொஞ்ச நேரம் அது இல்லாமல் புத்தகம் படிப்பது, கணக்கு போடுவது, யோசித்து எழுதுவது போன்ற பயிற்சிகளை செய்ய வேண்டும். அது நம் மூளைக்கு உதவியாக இருக்க வேண்டும், மூளைக்கு பதிலாக இருக்கக் கூடாது.

சி.கிருத்திகா
அன்புவழிபுரம்

# புத்தகம்



பேசாத தோழன் நீ,
பேசிக்கொண்டே இருக்கிறாய்
என்னுடன்.

உன்னை திறக்கும் போதெல்லாம்,
என்னை நானே திறக்கிறேன்.

தூசி படிந்த அலுமாரியில் நீ இல்லை,
என் மனதின் மூலையில் இருக்கிறாய்.

ஒரு பக்கம் முடிந்தாலும்,
இன்னொரு பக்கம் தொடங்குகிறாய்,
வாழ்க்கையை போல.

உன்னை மூடி வைத்தாலும்,
உன் வாசம் மூடுவதில்லை.
கிழிந்த பக்கங்களில் கூட,
என் கனவுகள் ஒட்டியிருக்கின்றன.
நீ வெறும் புத்தகம் இல்லை, என்
பழைய காதல்....

மு.சந்தியா
செல்வநாயகபுரம்



# தாயகமும் வாழ்வும்


RPL
RANGERS PREMIER LEAGUE
DATE 2026.10.17
PAY TO THE ORDER OF
CHAMPION
Rs. 60,000
RUPEES Sixty Thousand Only
LALA ADZONE
YASMOBILE



